بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 5 | இதழ் 44

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

11 ரபீவுல் அவ்வல் 1442 ஹிஜ்ரி கமரி ★ 29 இகா 1399 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி ★ 29 அக்டோபர் 2020

## அல்லாஹ்வின் கட்டளை

وَاِذَا حُیِّیۡتُمۡ بِتَحِیَّۃٍ

فَحَیُّوۡا بِاَحۡسَنَ مِنۡہَاۤ اَوۡ رُدُّوۡہَا ؕ

اِنَّ اللّٰہَ کَانَ عَلٰی کُلِّ شَیۡءٍ حَسِیۡبًا

(அந்நிஸா : 87)

மேலும் உங்களுக்கு ஏதேனும் நல்வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டால், அதனை விட சிறந்த முறையில் வாழ்த்துங்கள் அல்லது (குறைந்தது) அதனையே திருப்பிக் கூறுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றையும் கணக்கெடுப்பவனாவான்.

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இறை ஞானத்தில் இருக்கும் இன்பம் எத்தகையதென்றால் அதை எந்தக் கண்ணும் கண்டிராதது; எந்தக் காதும் கேட்டிராதது; வேறு எந்த உணர்வும் அதை உணராதது ஆகும்.**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் வழிகாட்டல்கள்**

## உலக மற்றும் உலக மகிழ்ச்சிகளின் உண்மை நிலை

உலகம் மற்றும் உலக மகிழ்ச்சிகளின் உண்மை நிலை கேளிக்கை, விளையாட்டை விட அதிகமானதொன்றும் இல்லை. ஒன்று, அவை தற்காலிகமானவையும் சில நாட்களுக்கு உரியவையுமாகும். அந்த மகிழ்ச்சிகளின் விளைவு மனிதன் இறைவனை விட்டும் தூரம் விலகி விடுகின்றான். ஆனால் இறைவன் மூலமாகக் கிடைக்கும் இன்பம் எத்தகையதென்றால் அதை எந்தக் கண்ணும் கண்டிராதது; எந்தக் காதும் கேட்டிராதது; வேறு எந்த உணர்வும் அதை உணராதது ஆகும். அது கிழித்துக் கொண்டு வெளியேறி விடும் ஒன்றாகும். ஒவ்வொரு நொடிப் பொழுதும் அதனால் புதிய இன்பம் கிடைக்கிறது. அது முன்னர் கண்டிராததாகும்.

மனிதனுக்கு இறைவனோடு குறிப்பிட்ட ஒரு தொடர்பு இருக்கிறது. மனிதத்துவம் மற்றும் இறை தன்மையின் தொடர்பு குறித்து இறை ஞானங்களைப் பெற்றவர்கள் மிகவும் நுட்பமான வாதங்களைச் செய்துள்ளனர். குழந்தையின் வாய் கல்லில் உரசினால் அந்தக் கல்லில் இருந்து பால் சுரக்கும்; வயிறு நிறையும் என எந்த அறிவுள்ளவராவது கூற முடியுமா? ஒருபோதும் கூற முடியாது. அவ்வாறே மனிதன் இறை சந்நிதியில் விழாதவரை அவனது ஆன்மா அழிந்து ருபூபிய்யத்துடன் தொடர்பை ஏற்படுத்தாத வரை அது இல்லாமை அல்லது இல்லாமை போன்று இருத்தல் என்ற நிலை ஏற்படாத வரை – ஏனெனில் ருபூபிய்யத் அதைத்தான் நாடுகிறது – அந்த நேரம் வரைஅது ஆன்மீக பால் மூலமாக வளர முடியாது.

‘லஹ்வ்’ (கேளிக்கை) என்பதில் பெண்களின் காதலும் அடங்கும். மனிதன் பெண்ணிடம் செல்கிறான். ஆனால் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அந்த அன்பு, இன்பத்தின் வீரியம் மாறி விடுகிறது. ஆனால் இவையெல்லாம் அல்லாஹ்வுடன் உண்மையான அன்பு கொண்ட பிறகு கிடைத்தால் பிறகு அது நிம்மதியிலும் நிம்மதியாகவும் இன்பத்திலும் இன்பமாகவும் கிடைக்கிறது. எதுவரையெனில், உண்மையான இறை ஞானத்தின் வாசல் திறந்து விடுகிறது. மேலும் ஒரு நிரந்தரமான அழியாத நிம்மதியில் நுழைந்து விடுகிறது. அங்கு பரிசுத்தத்தையும் தூய்மையையும் தவிர வேறேதுமில்லை. அது இறைவனிடம் உள்ள இன்பமாகும். அதனைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். உண்மையான இன்பத்தையே பெறுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 195–196 காதியான் பதிப்பு 2018)

## நபிமொழிகள்

**நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையில் இந்த துஆவை செய்து வந்தார்கள்.**

عَنۡ عَائِشَۃَ زَوۡجِ النَّبِیِّ صَلَّی اللّٰہُ عَلَیۡہِ وَسَلَّمَ اَنَّ رَسُوۡلَ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیۡہِ وَسَلَّمَ کَانَ یَدۡعُوۡ فِی الصَّلَاۃِ اَللّٰھُمَّ اِنِّیۡ اَعُوۡذُبِکَ مِنۡ عَذَابِ الۡقَبۡرِ وَاَعُوۡذُبِکَ مِنۡ فِتۡنَۃِ الۡمَسِیۡحِ الدَّجَّالِ وَاَعُوۡذُبِکَ مِنۡ فِتۡنَۃِ الۡمَحۡیَا وَفِتۡنَۃِ الۡمَمَاتِ اَللّٰھُمَّ اِنِّیۡ اَعُوۡذُبِکَ مِنَ الۡمَأۡثَمِ وَالۡمَغۡرَمِ فَقَالَ لَہٗ قَائِلٌ مَا اَکۡثَرَ مَاتَسۡتَعِیۡذُ مِنَ الۡمَغۡرَمِ فَقَالَ اِنَّ الرَّجُلَ اِذَا غَرِمَ حَدَّثَ فَکَذَبَ وَوَعَدَ فَاَخۡلَفَ۔

*ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மனைவி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் (தஷஹ்ஹுதுக்குப் பிறகு) இந்த துஆவை செய்தார்கள். அல்லாஹ்வே! கபரின் தண்டனையில் இருந்து நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். மஸீஹ் தஜ்ஜாலின் ஃபித்னாவிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். அல்லாஹ்வே! பாவம் மற்றும் கடனலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.*

*கடன் தொல்லையிலிருந்து அதிக–மாகப் பாதுகாவல் தேடுகிறீர்களே! என ஒருவர் கேட்டார். அதற்கு அவர்கள் கூறினார்கள்: மனிதன் கடனாளியாகும்போது தனது விஷயத்தில் பொய்யனாகி விடுகிறான். மேலும் அவர் வாக்குறுதி அளிக்கும் போது வாக்கு மீறுகிறார்.*

*(ஸஹீஹ் புகாரி தொகுதி 2 கிதாபுன் அஸான். காதியான் பதிப்பு 2006)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

பிலால் (ரலி) அவர்களின் பாங்கு பற்றி சிரிக்கின்றீர்கள். ஆனால் அவர் பாங்கு சொல்லும்போது அல்லாஹ் அர்ஷில் மகிழ்ச்சி அடைகின்றான்.

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பாங்கு சொல்பவர்கள் அனைவருக்கும் தலைவராக இருக்கும் அந்த மனிதர் எவ்வளவு நல்ல மனிதராவார். அவரைப் பின்பற்றுபவர்கள் பாங்கு சொல்பராகவே இருப்பார்கள். மேலும் மறுமை நாளில் எல்லாரையும் விட மிக நீண்ட கழுத்துக்களைக் கொண்டவர்கள் பாங்கு சொல்பவர்களாகவே இருப்பார்கள்.

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சுவர்க்கம் மூன்று பேர்களை சந்திப்பதற்கு மிகவும் ஆர்வமுடையதாக இருக்கிறது. அலி (ரலி), அம்மார் (ரலி), பிலால் (ரலி).

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்னை இரவு நேரத்தில் (இஸ்ராவின் போது) அழைத்துச் சென்றபோது நான் காலடிகளின் தடங்களைக் கண்டேன். நான் ஜிப்ராயீலிடம் இந்தக் காலடிகள் எத்தகையது எனக் கேட்டேன். அதற்கு ஜிப்ராயீல், இது பிலால் ஆவார் எனக் கூறினார்.

ஷஹீதுகளின் தலைவரும், பாங்கு சொல்பவர்களின் தலைவருமாகிய பிலால் எவ்வளவு நல்ல மனிதர் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஒரு காலத்தில் அற்பமாகக் கருதி கற்களில் இழுத்துச் சென்ற அந்த பிலாலின் உயர்ந்த அந்தஸ்து எத்தகையது! அந்தோ! நான் பிலாலாக இருந்திக்கக் கூடாதா என ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆசைப்பட்டார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பிலாலின் உதாரணம் தேனீயைப் போன்றதாகும். அது இனிப்பான பழங்களிலிருந்தும் கசப்பான புதர்களிலிருந்தும் கூட சாற்றை உருஞ்சுகிறது. ஆனால் தேனாக மாறும்போது முழுவதுமாக இனிப்பாக மாறி விடுகிறது.

இவர்தான் நமது பிலால் ஆவார். அவர் தமது எஜமானரின் மீதுள்ள அன்பையும் நன்றியுணர்வையும் அல்லாஹ்வின் தவ்ஹீதையும் தனது உள்ளத்தில் நிலைநாட்டுவதிலும் பிறகு அதனை செயல் அளவில் வெளிப்படுத்துவதன் முன்மாதிரியும் ஆவார்கள்.

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பாங்கு சொல்பவரும், ஹப்ஷாவில் முன்னேறியவரும், சுவர்க்கத்தில் மகத்துவத்யையும் பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் பிலால் பின் ரவாஹா (ரலி) அவர்களைப் பற்றிய நற்பண்புகள் தொடர்பான குறிப்பு.

ஐந்து மர்ஹூம்களான மவ்லானா யாகூப் சாஹிப், ஜனாப் இஃப்திகார் அலி குரைஷி, ஜனாபா ரஸிய்யா சுல்தானா, ஜனாப் முஹம்மது தாஹிர், அகீல் அஹ்மது ஆகியோர்.

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்லீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **25.09.2020** ஹிஜ்ரி ஷம்ஸி **25 தபூக் 1399** அன்று **டில்ஃபோர்டு இஸ்லாமாபாத்தில் உள்ள முபாரக் பள்ளிவாசலில்** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-
اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ- اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ-

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுடைய குறிப்புகள் சென்று கொண்டிருக்கின்றன. அப்துல்லாஹ் பின் புரைதா தமது தந்தை இடமிருந்து அறிக்கிறார். காலையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் பிலால் அவர்களை அழைத்து, பிலாலே! நீர் சுவர்க்கத்தில் எனக்கு முன் இருக்கிறீரே! என்ன காரணம்? நேற்று மாலை நான் சுவர்க்கத்தில் நுழைந்தபோது நான் உமது காலடி சத்தம் கேட்டேனே! என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் பிலால் அவர்கள் கூறினார்கள்: நான் எப்போது பாங்கு சொன்னாலும் இரு ரக்அத் நஃபில் தொழுகிறேன். எனது உளூ முறிந்து விட்டால் உடனே உளூ செய்து கொள்கிறேன். அல்லாஹ்விற்காக இரு ரக்அத் தொழுவதை என் மீது கடமையாக்கிக் கொண்டுள்ளேன். இதுவே அதற்குக் காரணம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (சுனன் அத்திர்மிதி அப்வாபுல் மனாகிப் ஹதீஸ் எண். 3689)

இன்னோர் அறிவிப்பும் பிரபலமானது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுபுஹ் தொழுகை நேரத்தில், பிலாலே! இஸ்லாத்தில் அனைவரையும் விட மிகவும் அதிகமாக எதிர்பார்ப்பிற்குரிய என்ன நற்செயல் செய்தீர்கள்? என்று கூறுங்கள். ஏனெனில் நான் சொர்க்கத்தில் உங்கள் காலடி சத்தத்தைக் கேட்டேன் என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் பிலால் கூறினார்கள்: வேறு எந்த பெரிய நற்செயலும் இல்லை. நான் இரவிலோ பகலிலோ உளூ செய்தால் அந்த உளூவுடன் முடிந்த அளவுக்கு தொழுவேன். இது புகாரியின் அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி கிதாப் தஹஜ்ஜுத். பாப் ஃபஸலுத் தஹூர் ஹதீஸ் எண். 1149)

இதன் பொருள், அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட மேலே சென்று விட்டார்கள் என்பதன்று. இது தூய்மை மற்றும் மறைவான இறைவணக்கங்களின் காரணத்தால் அல்லாஹ் அவருக்கு இந்தத் தகுதியை வழங்கினான். உலகில் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்ததுபோன்று சொர்க்கத்திலும் இருந்தார்கள் என்பதாகும். கடந்த அறிவிப்பிலும் ஒரு குறிப்பு வந்தது. ஈத் உடைய நாளில் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஈட்டியைப் பிடித்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் செல்வார்கள் என்று வந்தது. பிறகு கிப்லாவை நோக்கி ஊன்றி நட்டு விடுவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஈது தொழ வைத்தார்கள். ஹஸ்ரத் பிலால் உடைய தகுதி தூய்மையின் காரணத்தால் சொர்க்கத்திலும் அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நிலை நிறுத்தினான். அதனையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு காட்சியில் கண்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்னை இரவில் சொர்க்கத்திற்கு எடுத்துச்

செல்லப்பட்டது. நான் ஒரு காலடி சத்தம் கேட்டேன். நான், 'ஜிப்ரீலே! இந்தக் காலடி சத்தம் எவ்வாறு வந்தது?' என்று கேட்டேன். ஜிப்ரீல், 'அது பிலால் உடையது' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அந்தோ! ஹஸ்ரத் பிலால் உடைய தாயின் வயிற்றில் பிறந்திருக்கக் கூடாதா? அந்தோ! பிலால் உடைய தந்தை எனது தந்தையாக இருந்திருக்கக் கூடாதா? நான் பிலால் போன்று இருந்திருக்கலாம். (மஜ்மவுஸ் ஸவாயித் கிதாபுல் மனாகிப். பாப் ஃபஸ்லுன் பிலாலுல் முஅஜ்ஜினு பாகம் 9 பக்கம் 363 ஹதீஸ் எண். 15635 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 2001) பிலால் உடைய தகுதி எத்தகையதாக உள்ளது? பிலால் அந்த வேளையில் அர்ப்பமானவராகக் கருதப்பட்டு காலடியில் இட்டு நசுக்கப்பட்டார். அவரைப் பார்த்து ஹஸ்ரத் அபூபக்ர், நான் பிலாலாக இருந்திருக்கக் கூடாதா? என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் பஷீர் அஹ்மது சாஹிப் பத்ர் சஹாபாக்களைப் பற்றிக் கூறும்போது ஓரிடத்தில் எழுதியுள்ளார்கள்: பிலால் பின் ரவாஹா அவர்கள், உமையா பின் கலப் உடைய அபிஸீனிய அடிமையாக இருந்தார்கள். ஹிஜ்ரத்திற்குப் பிறகு அஸான் (தொழுகை அழைப்பு) கொடுக்கும் பணி அன்னாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அன்னார் அஸான் கொடுப்பதை விட்டு விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது கிலாஃபத் காலத்தில் சிரியா வெற்றி கொள்ளப்பட்டது. அப்போது உமர் (ரலி) அவர்கள் வலியுறுத்தியதற்கு இணங்க அன்னார் ஒருமுறை அஸான் வழங்கினார்கள். எல்லாருக்கும் அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலம் நினைவுக்கு வந்தது. இந்த வகையில் ஹஸ்ரத் உமர் மற்றும் பிற சஹாபாக்கள் இருக்கும்போது எவ்வளவு அழுதார்கள் எனில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் பிலால் மீது எவ்வளவு நேசம் இருந்தது எனில், ஹஸ்ரத் பிலால் வஃபாத் ஆகும்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இன்று முஸ்லிம்களின் தலைவர் சென்று போய் விட்டார் என்று கூறினார்கள். ஓர் ஏழை அபிஸீனிய அடிமையைப் பற்றி அந்த நேரத்தில் கூறப்பட்ட வார்த்தையாகும். (சீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) பக்கம் 124–125)

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அஹ்மதிப் பெண்களிடம் உரை நிகழ்த்தும்போது கூறினார்கள்: திருக்குர்ஆனின் வசனமாகிய,

اَلۡمَالُ وَالۡبَنُوۡنَ زِيۡنَةُ الۡحَيٰوةِ الدُّنۡيَا ۚ وَالۡبٰقِيٰتُ الصّٰلِحٰتُ خَيۡرٌ عِنۡدَ رَبِّكَ ثَوَابًا وَّخَيۡرٌ اَمَلًا

**(18:48)** என்பதை ஓதி அதன் விரிவுரையாகக் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் பிலால் பற்றி குறிப்பிட்டார்கள். ஒரேயொரு பொருள்தான் நிலைத்து நிற்கக் கூடியது. அது பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் எந்தப் பணியை இறைவனுக்காக செய்தோமோ அது நிலைத்து நிற்கும். இப்போது ஹஸ்ரத் அபூஹுரைராவின் சந்ததிகள் எங்கே? இருப்பிடம் எங்கே? அவர்கள் இருக்கிறார்களா? சந்ததிகள் இருந்ததா? தெரியவில்லை. நாம் சந்ததிகளைப் பார்க்கவுமில்லை. இருப்பிடத்தைப் பார்க்கவுமில்லை. சொத்துக்களைப் பார்க்கவும் இல்லை. ஆனால் ஹஸ்ரத் அபூஹுரைராவின் பெயரைக் கேட்டதும் ரலியல்லாஹு அன்ஹு என்று கூறுகிறோம்.

அன்னார் மேலும் கூறுகிறார்கள்: சில நாள்களுக்கு முன் ஓர் அரபு நாட்டுக்காரர் வந்தார். நான் ஹஸ்ரத் பிலால் உடைய வம்சத்தைச் சார்ந்தவன் என்று கூறினார். அவர் உண்மை கூறுகிறாரா? இல்லை பொய் கூறுகிறாரா? என்று தெரியவில்லை. ஆனால் எனது உள்ளம் அப்போது அவரை அணைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பியது. ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய பள்ளியில் அஸான் கொடுத்தவரின் சந்ததிகளைச் சார்ந்தவர் என்று தோன்றியது. இன்று பிலால் உடைய வம்சம் எங்கே? இருக்கிறார்களா? இல்லையா? என்பது தெரியாது. இருக்கிறார்கள் என்றால் எங்கு இருக்கிறார்கள்? இடம் எங்கு உள்ளது? எந்தச் சொத்தும் தென்படவில்லை. இவர்களின் சொத்துபத்துகள் எங்கு உள்ளன? ஆனால் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடைய பள்ளியில் அவர் அஸான் கொடுத்து வந்தார். அது மட்டும் இப்போதும் எஞ்சியுள்ளது. அதுவே இருக்கும். (பெண்களுக்கான உரை. அன்வாருல் உலூம் தொகுதி 16, பக்கம் 457–457) அந்த நன்மைகளே நிரந்தரமாக இருக்கக் கூடியதாகும். ஹஸ்ரத் பிலால் (ரலி) மூலமாக 44 ஹதீஸ்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. நம்பத்தகுந்த இரு ஹதீஸ் நூல்களில் (புகாரி, முஸ்லிம்) நான்கு அறிவிப்புகள் வருகின்றன.

(சீருன் அஃலாமுன் நப்லாயீ லில் இமாமி அத்தஹபீ பாகம் 1 பக்கம் 360 'பிலால் இப்னு ரபாஹ்' முஅஸ்ஸ ஸஹ்ரிர் ரிசாலாஹ் 2014)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ''சொர்க்கம் மூன்று பேரை சந்திக்க மிகவும் விரும்புகிறது. அலி, அம்மார், ஹஸ்ரத் பிலால்'' என்று கூறினார்கள்.

(சீருன் அஃலாமுன் நப்லாயீ லில் இமாமி அத்தஹபீ பாகம் 1 பக்கம் 355 'பிலால் இப்னு ரபாஹ்' முஅஸ்ஸ ஸஹ்ரிர் ரிசாலாஹ் 2014)

ஒருமுறை ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் உடைய சிறப்புகளைக் கூறும்போது ஹஸ்ரத் அபூபக்ரின் சிறப்புக்களில் ஒன்றாக ஹஸ்ரத் பிலாலின் பக்கம் சுட்டிக் காண்பித்து இந்த பிலால் நமது தலைவர் என்று கூறினார்கள். இவர் ஹஸ்ரத் அபூபக்ரின் நன்மைகளில் ஒரு நன்மையாகும் என்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் பிலாலை அடிமைத்தளையில் இருந்து விடுவித்தார்கள்.

(தாரீஹ் தமிஷ்க். அல்கபீரு லிஇப்னி அஸாகிர் தொகுதி 10 பக்கம் 363 திக்ர் மின் இஸ்முஹு 'பிலால் இப்னு ரபாஹ்' தாருன் அஹ்யாவுத் தராசுல் அரபி பைரூத் 2001)

அயிஸ் பின் அம்ர் அவர்களின் அறிவிப்பு. ஹஸ்ரத் ஸல்மான், ஹஸ்ரத் ஸுஹைப் உடன் ஹஸ்ரத் பிலால் ஒரு சபையில் இருக்கும் போது அபூ ஸுஃப்யான் வந்தார். உடனே அம்மக்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ்வின் வாள் அல்லாஹ்வின் எதிரியின் கழுத்தில் சரியாகப்படவில்லை என்றார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் கூறினார்கள். குறைஷிகளின் கண்ணியமிக்க தலைவரைப் பற்றியா அவ்வாறு கூறுகிறீர்கள். ஹஸ்ரத் அபூபக்ர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து கூறினார்கள். நாம் இவர்களுக்கு சரியான பதிலடி கொடுக்கவில்லை என்று அவர்கள் பேசுகிறார்கள். அதாவது அபூபக்ருக்கு அவர் பேச்சு பிடிக்கவில்லை. நீங்கள் குரைஷி தலைவரைப் பற்றியா அவ்வாறு கூறுகிறீர்கள். பிறகு அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அதனை தெரிவித்தார்கள். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அபூபக்ரே! அவர்களிடம் நீர் கோபம் கொண்டு விட்டீரா? நீர் கோபம் கொண்டு உமது ரப்பை கோபமூட்டுகிறீர்' என்றார்கள். உடனே ஹஸ்ரத் அபூபக்ர், அவர்களிடம் வந்து, 'எனது அன்புக்குரிய சகோதரர்களே! நான் உங்களைக் கோபப்படுத்தி விட்டேன்' என்றும் கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து கூறினால் அன்னார் தடுப்பார்கள் என்று நினைத்தார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருப்பி நீர் அம்மக்களைக் கோபப்படுத்தி விட்டீர் என்று கூறி விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ரைப் பாருங்கள்! அன்னாரின் தகுதி எவ்வாறிருந்தது? அன்னார் உடனே அந்த ஏழை மக்களிடம் சென்று என் அன்புக்குரிய சகோதரர்களே! நான் உங்களைக் கோபப்படுத்தி விட்டேனா? என்று கேட்டார்கள். அவர்கள் இல்லை என்று கூறினார்கள். சகோதரரே! இல்லை; இல்லை. அல்லாஹ் உம்மை மன்னிக்கட்டும். அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. கோபம் ஒன்றும் இல்லை என்றனர்.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஃபஸாயிலுஸ் ஸஹாபா பாப் மின் ஃபஸாயிலு ஸல்மான் வசுஹைப் வபிலால் ஹதீஸ் எண். 2504)

ஹஸ்ரத் அபூ மூஸாவிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருகில் இருந்தேன். அன்னார் அப்போது மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையில் உள்ள ஜயிர்ரானா என்ற இடத்தில் தங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் பிலால், அவர்களுடன் இருந்தார்கள். ஓர் அரபி மனிதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து கேட்டார். முஹம்மதே! (ஸல்) நீர் என்னிடம் செய்த வாக்குறுதியை நிறைவேற்ற மாட்டீரா?

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உமக்கு நற்செய்தி! உடனே அந்த ஆடு மேய்ப்பவர் கூறினார். எனக்கு உமது நற்செய்தியை பலமுறை கூறிவிட்டீர். உடனே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூ மூஸா மற்றும் ஹஸ்ரத் பிலால் பக்கம் திரும்பி கோபம் கொண்டதுபோன்று கூறினார்கள். இவர் நற்செய்தியை மறுத்து விட்டார். நான் நற்செய்தி கூறும்போது மறுத்து விட்டார். நீங்கள் இருவரும் எனது நற்செய்தியை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றார்கள். அவர்கள் இருவரும் யாரஸூலல்லாஹ்! நாங்கள் ஏற்றுக் கொண்டோம் என்றனர். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு பாத்திரத்தை கேட்டு வாங்கினார்கள். அதில் தண்ணீர் இருந்தது. அன்னார் அதில் தமது இரு கையையும் முகத்தையும் கழுவினார்கள். அதில் உமிழ்ந்தார்கள். பிறகு இதனை இருவரும் அருந்துங்கள் என்றார்கள். இருவரும் உங்கள் நெஞ்சங்களிலும் முகத்திலும் வாரித் தெளியுங்கள். மகிழ்ச்சி அடையுங்கள் என்று கூறினார்கள். அதன்படியே அந்த இருவரும் அந்தப் பாத்திரத்தை வாங்கி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்யுமாறு கூறியபடியே செய்தார்கள். பர்தாவின் பின் நின்று ஹஸ்ரத் உம்மே சல்மா அழைத்து உங்கள் இருவருடைய பாத்திரத்தில் உள்ளதை உங்கள் தாயுக்காகவும் ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் நம்பிக்கை கொண்டவர்களின் அன்னையாகிய எனக்காகவும் சிறிது வையுங்கள் என்று கூறினார்கள்.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஃபஸாயிலுஸ் ஸஹாபா பாப் மின் ஃபஸாயிலு அபிமூஸா வஅபி ஆமிருல் அஷ்அரிய்யீன் (ரலி) ஹதீஸ் எண். 2497)

ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு நபிக்கும் ஏழு நகீப் (கண்காணிப்பாளர்களை) வழங்கியுள்ளான். எனக்கு 14 பேரை அதாவது இரு மடங்காகத் தந்துள்ளான். நாங்கள் யார் யாரெல்லாம் என்று கேட்டோம்.

ஹஸ்ரத் அலி கூறுகிறார்: 1) நான் 2) ஹஸன் 3) ஹுஸைன் 4) ஜாஃபர் 5) ஹஸ்ரத் ஹம்ஸா 6) ஹஸ்ரத் அபூபக்ர் 7) ஹஸ்ரத் உமர் 8) ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் 9) ஹஸ்ரத் பிலால் 10) ஸல்மான் 11) மிக்தாது 12) அபூஸர் 13) அம்மார் 14) அப்துல்லாஹ் பின் மஸ்வூது.

(சுனன் அத்திர்மிதி அப்வாபுல் மனாகிப் ஹதீஸ் எண். 3785)

பிறகு ஸைத் பின் அர்க்கம் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பிலால் எத்தகைய சிறந்த மனிதராக இருக்கிறார்கள். அழைப்பாளர்கள் அனைவருக்கும் தலைவர் ஆவார்கள். அவரைப் பின்பற்றுபவர்கள் அழைப்பாளர்களே ஆவர். மறுமை நாளில் எல்லாரையும் விட நீண்ட கழுத்தை உடையவர் –களாக இவர்களே இருப்பர்.

(முஸ்தத்ரகு அலஸ் ஸஹீஹைன் லில் ஹாக்கிம் திக்ர் பிலால் இப்னு ரபாஹ் ஹதீஸ் எண்.5244 தொகுதி 3 பக்கம் 322 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 2002)

ஸைத் பின் அர்க்கம் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பிலால் எத்தனை மிகச் சிறந்த மனிதராக இருக்கிறார். அவர்கள் உயிர்த்தியாகிகள் மற்றும் அழைப்பாளர்களின் தலைவராக இருக்கிறார். மறுமை நாளில் எல்லாரையும் விட நீண்ட கழுத்தை உடையவர் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களே ஆவார்கள். அதாவது பெரும் கண்ணியத்திற்குரிய இருப்பிடம் அவர்களுக்கு கிடைக்கும்.

(மஜ்மவுஸ் ஸவாயித் கிதாபுல் மனாகிப். பாப் ஃபஸ்லுன் பிலாலுல் முஅஜ்ஜினு பாகம் 9 பக்கம் 363 ஹதீஸ் எண். 15636 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 2001)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பிலாலுக்கு ஜன்னத்தில் உள்ள பெண் ஒட்டகங்களில் ஓர் ஒட்டகம் தரப்படும். அதன் மீது அவர் பயணம் செய்வார்.

(சீருன் அஃலாமுன் நப்லாயீ லில் இமாமி அத்தஹபீ பாகம் 1 பக்கம் 355 'பிலால் இப்னு ரபாஹ்' முஅஸ்ஸ ஸஹரிர் ரிசாலாஹ் 2014)

ஹஸ்ரத் பிலால் அவர்களின் துணைவியார் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் வந்து, ஸலாம் கூறினார்கள். பிலால் இருக்கிறாரா? என்றார்கள். நான் இல்லை என்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'நீங்கள் பிலால் மீது கோபம் கொண்டதுபோன்று தெரிகிறதே!' என்றார்கள். அதற்கு நான், 'அவர் என் மீது அன்பு கொண்டுள்ளார். வார்த்தைக்கு வார்த்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள் என்று கூறிக் கொண்டேயிருக்கிறார்' என்றேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பிலால் உடைய மனைவியிடம், 'பிலால் என்னிடமிருந்து எதனை உன்னிடம் கூறினாலும் அது நிச்சயமாக உண்மையாகவே இருக்கும். பிலால் உம்மிடம் தவறான வார்த்தையைக் கூறமாட்டார். நீர் ஒருபோதும் பிலால் மீது கோபம் கொள்ள வேண்டாம். அவ்வாறு செய்தால் பிலால் மீது நீர் கோபம் கொண்டிருக்கும் காலம் வரை உங்கள் அமல்கள் ஒப்புக் கொள்ளப்படாது' என்று கூறினார்கள்.

(தாரீஹ் தமிஷ்க். அல்கபீரு லிஇப்னி அஸாகிர் தொகுதி 10 பக்கம் 356 திக்ர் மின் இஸ்முஹு 'பிலால் இப்னு ரபாஹ்' தாருன் அஹ்யாவுத் தராசுல் அரபி பைரூத் 2001)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பிலால் உடைய உதாரணம் தேனீ போன்றதாகும். இனிய பழங்கள், கசப்பான இலைகளின் மீதும் அமர்ந்தாலும் தேன் உருவாகும்போது அனைத்தும் இனியதாகவே ஆகி விடுகிறது.

(மஜ்மவுஸ் ஸவாயித் கிதாபுல் மனாகிப். பாப் ஃபஸ்லுன் பிலாலுல் முஅஜ்ஜினு பாகம் 9 பக்கம் 364 ஹதீஸ் எண். 15639 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 2001)

ஹஸ்ரத் பிலால் உடைய மனைவி கூறுகிறார்கள்: ஹஸ்ரத் பிலால் படுக்கையில் படுக்கும்போது துஆ செய்வார்கள். அல்லாஹும்ம தஜாவஸ் அன் ஷய்யிஆத்தி வஃஸுர்னி பிஇல்லாத்தி – அல்லாஹ்வே! எனது தவறுகளை மன்னிப்பாயாக. எனது தவறுகள் விஷயத்தில் என்னை இயலாதவனாகக் கருதுவாயாக.

(அல் முஃஜமுல் கபீர் லித்தப்ரானீ பாப் பிலால் இப்னு ரபாஹ் தொகுதி 1 பக்கம் 337 ஹதீஸ் 1009 தாருன் அஹ்யாவுத் தராசுல் அரபீ பைரூத் 2002)

ஹஸ்ரத் பிலால் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: 'பிலாலே! ஏழ்மையில் மரணிப்பீராக. செல்வச் செழிப்பில் மரணிக்க வேண்டாம்.' நான், 'அது எவ்வாறு? இதன் பொருள் புரியவில்லை' என்று கேட்டேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உமக்கு செல்வம் வழங்கப்பட்டால் அதனை பதுக்கி வைத்துக் கொள்ள வேண்டாம். ஏதாவது பொருள் கேட்கப்பட்டால் மறுக்க வேண்டாம்.' அதற்கு நான், யாரஸூலல்லாஹ்! அவ்வாறு செய்ய முடியாவிட்டால் என்ன ஆகும்?' என்று கேட்டேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அவ்வாறு செய்ய வேண்டும்; இல்லையெனில் நெருப்பே தங்குமிடமாகும்'என்று கூறினார்கள். (அல் முஃஜமுல் கபீர் லித்தப்ரானீ பாப் பிலால் இப்னு ரபாஹ் தொகுதி 1 பக்கம் 341 ஹதீஸ் 1021 தாருன் அஹ்யாவுத் தராசுல் அரபீ பைரூத் 2002) கேட்பவருக்கு மறுக்கக் கூடாது. சேர்த்து வைத்து செலவு செய்யாமல் இருப்பதன்று; வழங்குவது அவசியமாகும்.

பிலால் உடைய மரணம் உமர் உடைய கிலாஃபத்தில் 20 ஹிஜ்ரியில் சிரியாவில் நடந்தது. சிலரது கருத்தில் அன்னாரது மரணம் ஹல்ப் –இல் நடந்தது. அப்போது அன்னாரின் வயது 60 –ஐ விட சற்று அதிமகாக இருந்தது. மக்களின் கருத்தின்படி பிலால் உடைய மரணம் 18 ஹிஜ்ரியில் நடந்தது. அன்னாரது உடல் நல்லடக்கம் திமிஷ்க் (டமாஸ்கஸ்) கபருஸ்தானில் பாபுஸ் ஸகீருக்கு அருகில் நடந்தது.

(தாரீஹ் தமிஷ்க். அல்கபீரு லிஇப்னி அஸாகிர் தொகுதி 10 பக்கம் 335 திக்ர் மின் இஸ்முஹு 'பிலால் இப்னு ரபாஹ்' தாருன் அஹ்யாவுத் தராசுல் அரபி பைரூத் 2001)

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நன்மை செய்பவராகி
இப்ராஹீமின் நேரான மார்க்கத்தைப் பின்பற்றுகிறவரை விட
அழகான மார்க்கத்தையுடையவர் யார்? அல்லாஹ்
இப்ராஹீமைத் தன் நெருங்கிய நண்பராக
ஆக்கிக் கொண்டான். (4:126)

S.S.H. MUHAMMED LEBBAI, *Melapalayam*

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ், ஹஸ்ரத் பிலால் உடைய தகுதி, அந்தஸ்து குறித்துக் குறிப்பிடும்போது கூறினார்கள்: இது குறித்து முன்னரும் கூறியுள்ளேன். தொடர்ச்சியாகக் கூறும் போது சில விபரங்கள் முன்னர் கூறியவை தொடர்ந்து வருகிறது. ஹஸ்ரத் பிலால் அபிஸீனியர் ஆவார்கள். அரபி மொழி தெரியாது. அரபி பேசுவார்கள். நிறைய தவறுகள் ஏற்படும். உதாரணமாக அபிஸீனியர்கள் 'ஷீன்' –ஐ 'ஸீன்' என்றே கூறி வந்தார்கள். ஹஸ்ரத் பிலால் அஸான் கொடுக்கும்போது 'அஷ்ஹது' –வுக்குப் பதில் 'அஸ்ஹது' என்று கூறி வந்தார்கள். அரபிகள் சிரித்தார்கள். அரபிகளிடம் தமது பாரம்பரிய பெருமை இருந்தது. அதே வேளையில் பிற மொழிச் சொற்களை அவர்களாலும் சரியாக உபயோகிக்க முடியாமல் இருக்கவே செய்கிறது. உதாரணமாக அரபிகள் ரொட்டியை ரொத்தி என்றுதான் கூறுவர். 'டே' என்பதற்குப் பதில் 'தே' என்று கூறுவர். 'சூரி' என்பதற்குப் பதில் 'ஜூரி' என்று கூறுவர். 'ச்சீம்' கூற முடியாது. 'ஜீம்' என்றே கூறுவர். இவ்வாறு அரபிகள் அரபி அல்லாதவர்களின் ஏதாவது ஒரு சொல்லைக் கூற முடியாதது போன்றே அரபி அல்லாதவர்களாலும் சில அரபிகளின் சொல்லை சொல்ல முடியாமல் போய் விடுகிறது. ஆனால் பாரம்பரிய பெருமையின் போதையால் அதனைக் குறித்து அவர்களால் சிந்திக்க முடியவில்லை. நாம் கூட பிற மொழியில் சில சொற்களைக் கூற முடியவில்லை என்று நினைப்பதில்லை.

ஹஸ்ரத் பிலால் உடைய 'அஸ்ஹது' கேட்டு மக்கள் சிரிப்பதைப் பார்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் பிலால் உடைய அஸான் கேட்டு சிரிக்கிறீர்களா? ஆனால் அவர் அஸான் கொடுக்கும்போது அல்லாஹ் அர்ஷில் மகிழ்ச்சி அடைகிறான். உங்கள் 'அஷ்ஹது' –வை விட பிலால் உடைய 'அஸ்ஹது' அல்லாஹ்வுக்கு பிடித்தமானதாக இருக்கிறது. பிலால் அபிஸீனியர் ஆவார். அபிஸீனியர்கள் அக்காலத்தில் அடிமையாக்கப்பட்டிருந்தனர். கடந்த நூற்றாண்டுகளில் கூட தற்கால நூற்றாண்டுகளில் கூட ஏன் இன்றும் கூட அடிமையாக்கப்படுகின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பிற சமுதாயத்தை ஏளனம் செய்யும் மக்களைச் சேர்ந்தவர்கள் அல்ல. அன்னார் பார்வையில் எல்லா சமுதாயமும் அல்லாஹ்வின் சம தகுதி கொண்ட மக்களே ஆவார். யூனானி மற்றும் அபிஸீனியர்களிடம், அரபிகளிடம் கொள்கின்ற அதே அன்பு அன்னாருக்கு இருந்தது. எந்த வித்தியாசமும் இருக்கவில்லை. அரபிகள் எவ்வாறு நேசத்திற்குரியவர்களாக இருந்தார்களோ அதே போன்று ஆப்பிரிக்கர் இருந்தனர்; யுனானியர் இருந்தனர். இந்த நேசம்தான் பிற சமுதாய மக்களிடம் அன்னார் மீது நேசம் கொள்ளச் செய்தது. இதனை நிறைய அரபிகளால் புரிய முடிந்ததில்லை. அன்னார் பிற சமுதாயத்திடம் அன்பு கொண்டதன் விளைவால்தான் பிற மக்களுக்கும் அன்னார் மீது அன்பு ஏற்பட்டது. அவர்களின் அன்பில் வித்தியாசம் இருக்கவில்லை. அவர்களின் முகத்தில் இருந்து அது தெரியவில்லை. இது எப்படி நடந்தது என்று அவர்கள் கருதினர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவில் பிறந்தார்கள். அரபு சமுதாயத்தில் பிறந்தார்கள். அரபியிலும் குறைஷி இனத்தில் பிறந்தார்கள். அம்மக்களோ பிற அரபு மக்களைக் கூட ஏளனமாகப் பார்ப்பவர்களாக இருந்தனர். மிக உயர்ந்த கோத்திரமாக தம்மைக் கருதினர். அவர்களுக்கு அபிஸீனியர்களுடன் என்ன உறவு இருந்தது? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பிற சமுதாயத்தின் மீது நேசம் ஏற்பட வேண்டும் எனில் பனூ ஹாஷிம் மீது ஏற்பட வேண்டும். அன்னாருக்கு எவர் மீதாவது நேசம் ஏற்பட வேண்டும் எனில் குறைஷிகள் மீது ஏற்பட வேண்டும். அரபி மக்கள் மீது ஏற்பட வேண்டும். அவர்கள்தான் அன்னாரது சொந்த இனமாக இருந்தார்கள். பிற சமுதாயத்தின் மக்களுக்கு அன்னார் மீது எப்படி அன்பு ஏற்பட்டது? அவர்களின் அரசுகளை இஸ்லாமிய அரசு வந்து அழித்து விட்டது. இருந்தும் அன்னார் மீது எப்படி அவர்களுக்கு அன்பு ஏற்பட்டது? பிற சமுதாயங்களாகிய அவர்களுடன் போர் நடந்துள்ளது. அவர்களுக்கு தோல்விகள் ஏற்பட்டுள்ளன. அவர்களின் அரசாங்கங்கள் முடிவுக்கு வந்து விட்டன. இருந்தும் கூட அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு ஏற்பட்டுள்ளது. இது எவ்வாறு ஏற்பட்டது? உள்ளபடியே அன்னார் மீது பகைமைதான் ஏற்பட வேண்டும். ஆனால் நிகழ்ந்தது என்ன?

இதற்கு நாம் முதலில் ஹஸ்ரத் மஸீஹ் நாஸிரி உடைய சமுதாயத்தை ஆய்வு செய்வோம். அவர்களுக்கு தமது எஜமானருடன் எத்தகைய அன்பு இருந்தது? என்று பார்ப்போம். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் பிடிபட்டபோது அவரது சிறப்பான சீடராகிய பின்னால் கலீஃபாவாக நிர்ணயித்த பீட்டர் பின்னாலேயே சென்றபோது போலீஸ் 'பின்னாலேயே ஏன் வருகிறீர்கள்? நீரும் அவர்களுள் ஒருவர் என்ற சந்தேகம் ஏற்படுகிறது' என்று கூறியதும், அவர் உடனே, 'நான் அவரது முரீது (சீடன்) அல்ல. நான் அவர் மீது சாபத்தை அனுப்புகிறேன். நான் மறுப்பது மட்டுமின்றி சாபமும் இடுகிறேன்' என்றார். ஈஸா (அலை) உடைய ஹவாரிகள் அவர் மீது அன்பு செலுத்தினார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. பிற்காலத்தில் பீட்டர் ரோமில் சிலுவையில் ஏற்றப்பட்டபோது துணிச்சலுடன் மரணத்தை ஏற்றுக் கொள்ளவும் செய்தார். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) மீது உள்ள நேசத்தை மறுக்கவில்லை. ஆனால் மஸீஹ் (அலை) அவர்களை சிலுவையில் அறையும்போது அவரது ஈமான் உறுதியாக இருக்கவில்லை. ஒன்றிரண்டு அடிகளில் அவர் பயந்து விட்டார். பிற்காலத்தில் தாமே சிலுவையை தாங்கி ஏற்றுக் கொண்டு விட்டார். எவ்வாறிருப்பினும் இது, மஸீஹ் (அலை) அவர்கள் மீது அவரது சமுதாயத்திற்கு இருந்த அன்பின் காட்சியாகும்.

இதற்கு எதிரில் இங்கே அடிமைகளைக் கூட பாருங்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டு அங்கேயே இருந்தார்கள். ஹஸ்ரத் பிலால் ஓர் அபிஸீனிய அடிமையாக இருந்தார்கள். அன்னாருக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அன்பு இருந்தது. நாம் பார்க்கிறோம்! பிலால் மீது என்ன தாக்கம் இருந்தது? சிலருக்கு தமது வணங்கும் பொருள்கள் மீது வெளிப்படையில் நேசம் இருக்கும். உண்மையில் அந்த அன்பு ஓர் எல்லையில் நின்று விடும். ஆனால் நாம் பார்க்க வேண்டியது என்னவெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் குறைஷியாக இல்லாத நிலையிலும் இன்னும் சொல்வதாயின், முழு அரபு மக்களும் வெறுக்கக்கூடிய இனத்தைச் சார்ந்தவர் மீது நேசத்தை வெளிப்படுத்தினார்கள். அது, ஒரு சாதாரணமான உடன் இருப்பவர் மீது கொள்கின்ற – கொள்ள வேண்டிய அன்பா? அல்லது அது உண்மையான நேசத்தின் வெளிப்பாடாக இருந்ததா? காட்டுகின்ற அன்பா? உண்மையான அன்பா? இதனை பிலால்தான் ஆய்வு செய்ய முடியும். இதனை ஆய்வு செய்வதற்கு நாம் பிலாலிடம் தான் செல்ல வேண்டியதுள்ளது. ஏனெனில் அவர்தான் சரியாக ஆய்வு செய்ய முடியும். இந்த சம்பவம் நடந்து 1300 ஆண்டுகள் கழிந்து விட்டன. நாம் இதில் என்ன ஆய்வு செய்ய முடியும்? நாம் பார்க்க வேண்டியது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நேசத்தை எவ்வாறு புரிந்திருந்தார்கள்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பிலால் மீது உண்மையான அன்பு இருந்ததா? அது குறித்து அவர் எவ்வாறு கருதினார்? நான் எவ்வாறு கருதினேன்? என்ற கேள்வி இல்லை. முதல் நூற்றாண்டின் மக்கள் என்ன கருதினர்? என்ற கேள்வி இல்லை. அதற்கு முந்தைய நூற்றாண்டு மக்கள் எவ்வாறு கருதினர்?

### திருக்குர்ஆனிலிருந்து...

நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை ஏமாற்ற நினைக்கின்றனர். ஆனால், அவன் அவர்களுடைய ஏமாற்றுதலுக்கு தண்டனை அளிப்பான். அவர்கள் தொழுகைக்காக நிற்கும்போது சோம்பி நிற்கின்றனர். அவர்கள் மக்களுக்குக் காட்டு(வதற்காக தொழு)கின்றனர். மேலும், அல்லாஹ்வைக் குறைவாகவே நினைவு கூருகின்றனர். (4:143)

A. NASIR AHMAD, *Melapalayam*

என்ற கேள்வி இல்லை. அதுமட்டுமின்றி சஹாபாக்கள் என்ன கருதினர்? என்ற கேள்வியும் இல்லை. மாறாக கேள்வி என்னவெனில், இந்த சிறு வாக்கியத்தை கவனிக்க வேண்டும். பிறர் எவ்வாறு கருதினர்? என்பதை விடுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்து சஹாபாக்கள் எவ்வாறு கருதினார்கள்? என்பதும் இல்லை. பிலால் எவ்வாறு கருதினார் என்பதே கேள்வியாகும். அதனை புரிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஒரு சிறு சொற்றொடரை ஆய்வு செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் அவரது 'அஸ்ஹது' –வைக் கேட்டு சிரிக்கிறீர்கள். ஆனால் அவரது அந்த அஸானைக் கேட்டு அல்லாஹ் அர்ஷில் இருந்து மகிழ்ச்சி அடைகிறான். உங்களது 'அஷ்ஹது' –வை விட அவரது 'அஸ்ஹது' –வுக்கு அதிகம் மதிப்பு தருகிறான். இந்தச் சொற்றொடர் வெறும் அந்த நேரத்தில் மகிழ்ச்சி ஏற்படுத்துவற்காக கூறியதா? அல்லது ஆழிய நேசத்துடன் கூறியதா? பிரச்சனையை அமுக்கிப் போட வாயளவில் கூறியதா? அல்லது ஆழிய அன்புடன் இதனை கூறினார்களா? உங்கள் 'அஷ்ஹது' –வை விட பிலாலின் 'அஸ்ஹது' அல்லாஹ்வுக்குப் பிரியமானது என்று கூறியது எத்தகைய ஒரு சொல்? இந்த சொற்றொடர் குறித்து பிலால் என்ன கருதினார்? என்றே பார்க்க வேண்டும். பிலால் இந்தச் சொற்றொடரிலிருந்து புரிந்தது; அன்னாரது உள்ளத்தில் பிற சமுதாயத்தின் மீது அதுவும் மனிதாகக் கருதப்படாத ஒரு சமுதாயத்தின் மீது அடிமையாக்கப்பட்ட ஒரு சமுதாயத்தின் மீது பேரன்பு இருந்தது என்பதேயாகும். அந்நிய சமுதாயமாக நாம் இருந்தும், அடிமையாக்கப்படும் சமுதாயமாக இருந்தும் என் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேரன்பு கொண்டிருந்தார்கள் என்று அவர் கருதினார். நாம் இந்த சம்பவத்தில் இருந்து சிறிது பின்செல்வோம். இதே மனிதர்தான் 'மமாத்தி லில்லாஹி ரப்பில் ஆலமீன்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: 'மமாத்தி லில்லாஹி ரப்பில் ஆலமீன்' – எனது மரணமும் கூட அல்லாஹ்வுக்காகவே ஆகும். அவன் ரப்புல் ஆலமீன் ஆவான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். புதிய அரசுகள் வந்தன. புதிய மனிதர்கள் வந்தனர். புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. காலம் கடந்தது. புதிய ஆட்சிகள் வந்தன. நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன. சஹாபாக்கள் நூற்றுக்கணக்கான மைல்கள் அரபு நாட்டுக்கு வெளியில் சென்று விடவும் செய்தனர். அவ்வாறு சென்றவர்களுள் ஹஸ்ரல் பிலாலும் ஒருவர் ஆவார்கள். நிறைய மாற்றங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு ஏற்பட்டு விட்டன. பிலால் சிரியாவுக்கு போய் விட்டார்கள். டமாஸ்கஸுக்கு போய் சேர்ந்து விட்டார்கள்.

ஒருநாள் சிலர் ஒன்று கூடினர். அதில் பிலாலும் இருந்தார்கள். அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் பிலால் அஸான் கூறி வந்தார். நாம் பிலால் மீண்டும் அஸான் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறோம் என்று பிலால் அவர்களிடம் கூறினர். ஆனால் பிலால் என்னால் அஸான் கொடுக்க முடியாது என்று மறுத்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நான் அஸான் கொடுக்க முடியாது. ஏனெனில் நாம் அஸான் கொடுக்க நினைக்கும்போதெல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்த்துக்குரிய காலம் நினைவுக்கு வருகிறது. எனக்கு உணர்ச்சி மேலிடுகிறது. பிறகு அஸான் கொடுக்க முடிவதில்லை. எனது சக்திக்கு அப்பாற்பட்ட விஷயமாக அது இருக்கிறது என்று கூறினார்கள். அந்த நாட்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் டமாஸ்கஸுக்கு வந்திருந்தார்கள். அன்னார் தற்செயலாக அங்கு சுற்றுப்பயணம் வந்திருந்தார்கள். மக்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், தாங்கள் பிலாலிடம் அஸான் தருமாறு கூறுங்கள் என்று கூறினர். அந்த மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்திருந்தார்கள். பிலால் அவர்களுடைய பாங்கைக் கேட்க எங்கள் காதுகள் மிகவும் விரும்புகின்றன என்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய காலம் நினைவில் வருகிறது. எங்கள் கற்பனையில் ஹஸ்ரத் பிலால் உடைய பாங்குதான் நினைவுக்கு வருகிறது. உள்ளபடியே இப்போது ஒருமுறை பிலால் உடைய அஸான் கேட்க விரும்புகிறோம். இதனால் அக்காலம் எங்கள் நினைவில் மீண்டும் வரும் என்றனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய காலத்தை நாங்கள் பார்க்கவில்லை என்று கூறுபவர்களும் அதில் இருந்தனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன் கூறப்பட்ட அந்த அஸானைக் கேட்க அத்தகையோரின் உள்ளமும் நாடியது. ஹஸ்ரத் உமர் (ரலி) பிலாலை அழைத்தார்கள். மக்களின் விருப்பம் நீங்கள் அஸான் கொடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் பிலால், நீங்கள் காலத்தின் கலீஃபா ஆவீர்கள். உங்கள் விருப்பத்திற்காக அஸான் கொடுக்கிறேன். ஆனால் என் உள்ளம் விரும்பவில்லை. அதனைக் கூறிக் கொள்கிறேன் என்றவாறு எழுந்து உரத்த குரலில் அஸான் கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் கூறியதுபோன்றே அஸான் கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தை நினைவு கூர்ந்து அன்னாரின் சஹாபாக்கள் அரபு நாட்டின் குடிமக்கள் இந்த அஸான் கேட்டு கண்ணீர் சிந்தினர். இன்னும் சிலருக்கு மூக்கும் வடிந்தது. ஹஸ்ரத் பிலால் அஸான் கொடுத்துக் கொண்டே சென்றார். கேட்டவர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய காலம் நினைவுக்கு வந்து தேம்பி அழ வைத்தது. ஹஸ்ரத் பிலால் அபிஸீனியராக இருந்தார்கள். அரபிகள் அம்மக்களை வேலை வாங்கினார்கள். அரபிகளுக்கு அம்மக்களுடன் இரத்த உறவு எதுவும் இருந்ததில்லை. சகோதரத் தொடர்பும் இருந்ததில்லை. அவர்களது உள்ளத்தில் என்ன தாக்கம் ஏற்பட்டது என்பதையும் பார்க்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலம் அந்த மக்களுக்கு நினைவில் வந்தது. ஒருவர் மற்றவரைப் பார்த்தும் தேம்பினார்கள். ஆனால் அந்த பிலாலோ அரபியரல்லாத அடிமையாக இருந்தார்கள். அவரது அஸானுக்கு என்ன தாக்கம் ஏற்பட்டது? அவர் அஸானை முடித்ததும் மயங்கி விட்டார்கள். சில நிமிடங்கள் கழித்து வஃபாத் ஆகி விட்டார்கள். இது அந்நிய சமுதாயத்திற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய வஃபாத்தின் மீது, 'எனக்கு அரபி, அரபி அல்லாதவர் என்ற எந்த வேறுபாடும் இல்லை' என்ற வாதத்தின் மீது இருந்த நம்பிக்கைக்கு மிகப் பெரிய சாட்சியமாகும். அடுத்த சமுதாயத்தைச் சார்ந்தவர் மூலம் கிடைத்த இந்த சாட்சியம் உண்மையான சாட்சியமாகும். அரபிகள் மற்றும் அரபி அல்லாதவர் மீது எந்தப் பாகுபாடும் இல்லை என்று அன்னார் கூறியதன் செயல் சாட்சியமாகும். அன்பு கலந்த அன்னாரின் சொற்களைக் கேட்ட அந்நிய சமுதாயங்கள் அதன் தாக்கத்தைப் பெற்றதும் அவர்களுக்கு நிச்சய உறுதி ஏற்பட்டது. நமது சமுதாயம் கூட நம்மீது இவ்வளவு நேசம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டுவது போன்ற ஒரு நேசத்தை நம்மீது காட்டாது என்று புரிய வைத்தது. (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 30 பக்கம் 263–267 குத்பா உரை 26 ஆகஸ்டு 1949) இதனை நிரூபித்தவர் நமது ஸய்யிதுனா பிலால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மீது ஏகத்துவத்தை உட்கார வைக்கவும், அதன் செயல் முன்மாதிரி காட்டியவர்களும் ஆவர் என்றும், அவர்களே நமக்கு முன்மாதிரி என்றும் புரிந்திருந்தார்கள்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களை விட்டு விட்டு, நிராகரிப்பாளர்களை (உங்களுடைய) நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் உங்களுக்கு எதிராக மிகத் தெளிவான குற்றச்சாட்டு(னைச் சுமத்துவத)ற்குரிய வாய்ப்பை இறைவனுக்குக் கொடுக்க விரும்புகின்றீர்களா? (4:145)

M. SABAHUL ISLAM & A. MOHIDEEN ALI
Melapalayam

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கனிவு, நட்பு உலகில் வேறு எங்கும் காண முடியாது. இதுவே இன்றும் அன்பு நேசத்தை ஏற்படுத்தும் அடிமைத்தளைகளை இதன் மூலமே உடைக்க முடியும். இன்றும் கூட நமது ஈடேற்றம் இதில்தான் உள்ளது. தவ்ஹீது உடைய நிலைநிற்றல், அரபு நாட்டின் ரஸூல் மீது பேரன்பு இதில்தான் உள்ளது. நமக்கும் அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. பிலால் உடைய நற்குறிப்பு இத்துடன் முடிகிறது.

இப்போது நான் சில மரணித்தவர்களின் நற்குறிப்பைக் கூறி ஜனாஸா தொழ வைப்பேன். முதலில் ***மவ்லானா தாலிப் யாகூப் சாஹிப்.*** இவர் தய்யிப் யாகூப் சாஹிபின் மகன் ஆவார்கள். இவர்கள் டிரினிடாடு குண்டோ பாகூ உடைய மவ்லவியாக இருந்தார்கள். 8 செப்டம்பர் அன்று தமது 63 –வது வயதில் வஃபாத் ஆனார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

சிறு வயது முதலே இவர்களுக்கு மார்க்கத்தின் மீது ஆர்வம் இருந்தது. டரினிடாடு வசித்தார்கள். ஐவேளை தொழுகை, திருக்குர்ஆன் ஓதுதல், இஸ்லாமிய நூற்களை வாசித்தல் ஆகிய வழக்கம் உள்ளவராக இருந்தார்கள். தொடக்கக் கல்விக்குப் பிறகு இவர்களுக்கு பிரிட்டீஷ் இன்சூரன்ஸ் –ல் வேலை கிடைத்தது. இருந்தும் 13 ஜனவரி 1979 –ல் வாழ்வை அர்ப்பணித்தார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவில் சேர்ந்து படித்தார்கள். 1989 –ல் ஷாஹித் பட்டம் பெற்றார். 1987 –ல் இவர்களுக்கு, முன்னாள் நாஸிர் அஃலா காதியான் மிர்ஸா முனவ்வர் அஹ்மது சாஹிப் தர்வேஷ் அவர்களின் மகளான முகர்ரமா சாஜிதா ஷாஹீன் சாஹிபாவுடன் திருமணம் நடந்தது. இவரது மனைவி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியாகிய பாயி பரக்கத் அலி சாஹிப் உடைய தந்தைவழிப் பேத்தியாவார்கள். இவர் ஜாமிஆவில் இருந்து வெளி வந்ததும் ஆப்பிரிக்காவில் ஸாயிரில் முதல் பணி நியமனம் செய்யப்பட்டது. அங்கு 1989 முதல் 1992 வரை கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் சேவை செய்யும் வாய்ப்பு பெற்றார்கள். பிறகு கியானா ஜமாஅத்தில் 1993 முதல் 1997 வரை மிஷனரியாக சேவை செய்யும் வாய்ப்பு பெற்றார்கள். பிறகு அங்கிருந்து கானாவிலுள்ள குப்ரிடுவா மண்டலத்தின் குப்ரிடுவா மற்றும் கமாஸி மண்டலத்தின் இரு வேறுபட்ட பகுதியில் நியமிக்கப்பட்டார்கள். 1997 முதல் 2004 வரை அங்கு சேவை செய்யும் வாய்ப்பு பெற்றார்கள். அங்கு கடும் நோய்வாய்ப்பட்டார்கள். உடல்நலம் பெற்ற பிறகு டிரின்டாட்டில் நியமிக்கப்பட்டார்கள். அங்கு பிரின்டாட் ஜமாஅத்தில் இறுதி மூச்சு வரை சேவை செய்யும் வாய்ப்பு பெற்றார்கள்.

உலகின் பல்வேறு பகுதிகளில் மிகவும் கலப்பற்ற முறையில் தொண்டு செய்தது மட்டுமின்றி புதிய அனுபவத்துடன் கல்வி அறிவு பெற்றவர்களுக்கு இஸ்லாத்தை புரிய வைத்தார்கள். எங்கு சென்றாலும் ஜமாஅத்தின் ஒவ்வொரு தனி மனிதருடன் தனிப்பட்ட தொடர்பு கொள்பவர்களாக இருந்தார்கள். ஜமாஅத்தின் மக்கள் இவர் மீது சிறப்பான அன்பு கொண்டார்கள். கடந்த பல வருடங்களாக சிறுநீரகத்தில் வலி இருந்தது. டயாலிஸிஸ் செய்வதற்காக வாரத்திற்கு மூன்று முறை மருத்துவமனை செல்ல வேண்டியது ஏற்பட்டது. ஜமாஅத் நிகழ்ச்சிகளில் எந்தத் தடையும் ஏற்பட விட்டதில்லை. மிகவும் இறையச்சமுள்ளவர்; எளிமையானவர்; பழகக்கூடியவர்; மென்மையானவர்; பொறுமைசாலி; கீழ்ப்படிவுள்ளர்; திறமையுள்ளவர். எல்லாரையும் புன்னகையுடன் சந்திப்பார். தொழுகையும் தஹஜ்ஜுத் மற்றும் திருக்குர்ஆன் திலாவத் மற்றும் உறங்கும் முன் 8 ரக்அத் தொழுகை இவை இவரது வழக்கமாக இருந்தன. ஜமாஅத் நடைமுறையைக் கடுமையாகப் பின்பற்றுபவராக இருந்தார். தமது குடும்பத்தையும் எல்லா நன்மைகளைச் செய்யுமாறு ஏவி வந்தார். தமது குடும்பத்துடன் கனிவுடன் நடப்பார். இவரது மனைவியுடன் ஒரு மகன் நாஸிர் யாகூப், அமினா யாகூப், அதிலா யாகூப் நினைவாக இருக்கின்றனர். இரு சகோதரர்கள், மூன்று சகோதரிகள். சிலர் டிரீன்டாட்டில் இருக்கிறார்கள். சிலர் ஆஸ்திரேலியாவில் இருக்கிறார்கள்.

இவரது ஒரு சகோதரரின் மனைவி அஹ்லன் யாகூப் கூறுகிறார்: நான் 30 வருடங்களுக்கு முன்பு பைஅத் செய்தேன். மவ்லானா சாஹிப் டிரின்டாட் வந்தபோது எனக்கு மார்க்கத்தின் புதிய விஷயங்களைப் புரிய வைத்தார்கள். இதனைக் கேட்டு எனக்கு மார்க்கத்தில் நிறைய கற்றுக் கொள்ள ஆர்வம் ஏற்பட்டது. தாலிப் யகூப் சாஹிப் உடைய நடைமுறையால் தய்யிப் யாகூப் முரப்பி ஆவதற்கு நிய்யத் செய்துள்ளார். ஜாமிஆ அஹ்மதிய்யா கனடாவில் இரண்டாம் வருடம் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்.

இவர் நோயுற்றிருக்கும்போது கவனித்த அஹ்மதி டாக்டர் கூறுகிறார்: இவர் மிகவும் நல்லொழுக்கமுள்ளவர். ஒவ்வொரு டாக்டர் மற்றும் நர்ஸ் ஆகிய இவருக்கு சிகிச்சை அளித்தவர்கள் அனைவரும் இவரது நல்லொழுக்கத்தின் தாக்கத்தைப் பெற்றனர். நோயாளி ஓரிடத்தில் அமர்ந்திருந்தார். மருத்துவமனையில் இடப்பற்றாக்குறை இருந்தது. எவராவது வந்தால் தாம் எழுந்து நின்று பிறருக்கு இடம் அளிப்பார். நோயாளிகளுக்கும் டாக்டர்களுக்கும் மக்களுக்கும் இவர் ஒரு முன்மாதிரியாக இருந்தார்.

பிரின்டாட் குவாக்கே உடைய மிஷனரி இன்சார்ஜ் எழுதுகிறார்: உண்மையான முறையில் ஒரு முரப்பி உடைய குணநலன்களைப் பெற்றுத் திகழ்ந்தார். கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதில் எப்போதும் முன்னால் நின்று வந்தார். தமது கண்காணிப்பாளர்களின் ஒவ்வொரு வார்த்தைக்கும் இணங்கி நடப்பார். ஒப்படைக்கப்பட்ட பணிகளை முடிக்க முயற்சி எடுப்பார். அல்லாஹ், அவனது ரஸூல் (ஸல்), ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மீது அளவு கடந்த அன்பு கொண்டிருந்தார். திருக்குர்ஆன் ஓதுதல், தஹஜ்ஜுத் தொழுதல் உடைய பழக்கம் இருந்தது.

காஸிர் வடாயிச் முரப்பி சில்சிலா கூறுகிறார்: பிரின்டாட்டில் எனது நியமனம் ஏற்பட்டபோது மவ்லானா சாஹிப் உடைய உடல் நலம் மிகவும் பலவீனமாக இருந்தது. வயதும் அதிகம். இரண்டு வருடத்திற்கு முன்பு கனடா ஜாமிஆவில் வெளியில் வந்த என்னைச் சந்திக்க மவ்லானா சாஹிப் 50 நிமிடங்கள் பயணம் செய்து மனைவி குழந்தையுடன் சந்திக்க வந்திருந்தார். மிகவும் கனிவுடன் நடந்து கொண்டார். ஒவ்வொரு இரண்டாவது மூன்றாவது நாட்களில் போன் செய்தும் மெஸேஜ் மூலமாக விசாரித்தும் வந்தார். புதிதாக வந்துள்ளீர்கள். ஏதாவது தேவைகள் இருக்கும் என்றும் எப்போதும் ஏதாவது நல்லுபதேசம் வழங்கி வந்தார். பெரியவர் சிறியவர் அனைவரிடமும் அன்புடன் பழகி வந்தார். கிலாஃபத்துடன் தொடர்பு வைக்குமாறு போதனை செய்து வந்தார். துஆ செய்து வருமாறு போதனை செய்தார். மகளும் இதையே கூறுகிறார். ஒவ்வொரு பணிக்காகவும் காலத்தின் கலீஃபாவிடம் துஆவுக்காக எழுதுமாறு கூறி வந்தார்.

முனீர் இப்ராஹீம் என்ற அஹ்மதி கூறுகிறார்: தப்லீகிற்காக ஏதாவது இடத்திற்குச் சென்றால் மவ்லானா அங்கு வந்து விடுவார். தப்லீகிற்காகச் சென்றால் நீங்கள் தெற்கே சென்றால் நான் வடக்கே செல்கிறேன். முடிந்த வரை அதிக அளவில் மக்களுக்கு செய்தி சேர வேண்டும் என்று கூறுவார். எப்போதும் புன்னகையுடன் இருப்பார். அவருடன் பணி செய்யும் மற்ற முரப்பிகளும் இருக்கிறார்கள். அவர்கள் இளைஞர்கள். அவர்களும் இதையே கூறுகின்றனர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

**நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரக ஆழத்தின் அடிமட்டத்தில் இருப்பர். அவர்களுக்கு உதவி செய்பவராக (எவரையும்) நீர் ஒருபோதும் காண மாட்டீர். (4:146)**

A. BASHEER AHMAD, *Melapalayam*

ஜமாஅத்தின் வளர்ச்சிக்காக தப்லீகிற்காக சிறு பணி செய்தாலும் மிகவும் மகிழ்ச்சி அடைவார். தைரியமூட்டுவார். ஒவ்வொருவரும் இவர் புன்னகையுடன் இருப்பார் என்று கூறுகின்றனர். சமாதானத்தை விரும்புவார். நண்பர்களுக்குள் மனத்தாங்கல் ஏற்பட்டால் சமாதானம் செய்வார். அஹ்மதிகள், சகோதரருக்காக பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவார். நானும் அவரை புன்னகையுடன் கண்டுள்ளேன். கிலாஃபத்துடன் அளவு கடந்த பற்று இருந்தது. இவரது பிள்ளைகளும் இதனைக் கூறுகின்றனர். எங்களிடமும் கிலாஃபத்துடன் தொடர்பு வையுங்கள் என்றே கூறி வந்தார் என்று கூறுகின்றனர். கடிதம் எழுதுங்கள் என்பார்.

புதிய அஹ்மதி நாரியிஷ் சாஹிப் கூறுகிறார்: பல்வேறு அஹ்மதி அல்லாத பள்ளிகளில் சென்று இஸ்லாம் பற்றி அறிய முயன்றேன். மவ்லானா தாலிப் சாஹிபைச் சந்தித்ததும் ஆதாரங்களைக் கேட்கும் முன்னரே எனது உள்ளத்தில் பெரிய தாக்கம் ஏற்பட்டது என்கிறார். பிறகு இதனால் அவர் பைஅத்தும் செய்து விட்டார். எவ்வாறிருப்பினும், தாலிப் சாஹிப் தமது வக்ஃபை மிகவும் அர்ப்பணிப்புடன் நிறைவேற்றினார். எந்த சமாளிப்புகளும் இருந்ததில்லை. எங்கு நியமித்தாலும் பணி செய்ய வேண்டும். பாகிஸ்தானில் போஸ்டிங் செய்யப்பட்டு நாட்டுக்குத் திரும்பக் கூடாது என்றாலும் அதற்கும் தயாராக உள்ளேன் என்றார். இந்த அடிப்படையில் பாகிஸ்தானில் இருக்கும்போது பஞ்சாபி கற்க முயற்சி செய்து வந்தார். இங்கு நியமித்தால் பஞ்சாபி மக்களைச் சந்திக்க வேண்டியது வரும் என்று கருதினார். பஞ்சாபி கற்று வந்தார்.

அல்லாஹ் அவருக்கு மன்னிப்பையும் கருணையையும் வழங்குவானாக. இவரது தகுதியை உயர்த்துவானாக. இவரது மனைவி மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவானாக. இவரது நன்மையை தொடரும் வாய்ப்பை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா, இஞ்சினியர் ***இப்திகார் அலி சாஹிப்*** உடையதாகும். இவர் முன்னாள் வகீலுல் மால் ஸாலிஸ் ஆவார்கள். தஹ்ரீகே ஜதீதின் நாயிப் சத்ர் ஆக இருந்தார்கள். இவருக்கு அல்லாஹ் நீண்ட வயதை வழங்கி இருந்தான். 3 ஜூன் அன்று தமது 99 –வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இப்திகார் அலி சாஹிப் உடைய தந்தையார் பெயர் மும்தாஜ் அலி குறைஷி சாஹிப் ஆகும். இவர் தொழிலின் அடிப்படையில் கால்நடை மருத்துவர். இப்திகார் அலி சாஹிப் இந்தியாவில் மீரட்டில் பிறந்தார். இரண்டாம் நிலை மற்றும் உயர்க்கல்வியை மீரட்டில் பெற்றார். பிறகு தாம்ஸன் இன்ஜினியரிங் காலேஜில் ரோடுகியில் இப்போது அது யுனிவர்சிட்டி ஆகிவிட்டது. அங்கு சேர்ந்தார். அங்கு இவர் 1944 –ல் சிவில் இஞ்சினியரிங்கில் படிப்பை முழுமை செய்தார். படிக்கும்போது அஹ்மதிய்யத்தை ஏற்கும் வாய்ப்பு பெற்றார். இவரது தந்தையார் அஹ்மதி இல்லை. இப்திகார் குறைஷி சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களைப் படித்து ஆராய்ச்சிக்குப் பிறகு அஹ்மதிய்யத்தை ஏற்றார்கள். அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி முக்தார் குரைஷி சாயிப் என்ற இவரது சகோதரியின் கணவர் மூலம் கிடைத்தது. இவரது தந்தையார், சகோதரியின் கணவர் முன்ஷி பயாஸ் அலி சாஹிப் மூலம் பெற்றார். இப்திகார் குறைஷி சாயிப் தமது சிறிய தந்தை தூரப் அலி சாஹிபிடம் படிப்பதற்காக வருவதாக இருந்தார். அவர் அஹ்மதி அல்ல. இப்திகார் குஷி சாஹிப் கஷ்பா சராபா மீரட்டில் உள்ள தூரப் அலி ஆகிய தமது பெரிய தந்தையாரிடம் வருவார். அங்கு பெரியவர்கள் மூலம் குறைஷி இப்திகார் அலி சாஹிபுக்கு ஜமாஅத் நூல்கள் கிடைத்தன. டில்லி ஜமாஅத் சிறு சிறு பிரசுரங்கள் வெளியிட்டு வந்தது. இப்திகார் சாஹிபிற்கு இந்த பிரசுரங்கள் கிடைத்து வந்தன. பயணத்தில் இப்திகார் அலி சாஹிப் எல்லாவற்றையும் படித்து விடுவார். பிறகு தமது தந்தையாரிடம் அதனைக் கொடுப்பார்.

இப்திகார் சாஹிப் தாம்ஸன் காலேஜில் படிக்கச் சேர்ந்தபோது அவரது தந்தையின் சகோதரியின் கணவர் மிக்தார் குறைஷி சாஹிப் விவரங்கள் அடங்கிய நூல்கள் மூலம் தப்லீக் செய்யத் தொடங்கினார். இப்திகார் அலி சாஹிப் விரிவாக பதில் கொடுக்கவும் செய்வார். அக்காலத்தில் தஹஜ்ஜுத் தொழவும் துஆ செய்யவும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் உள்ளத்தில் நிம்மதிக்குலைவும் பதற்றமும் இருந்தது. இந்த நிலை குறித்து இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு கடிதம் எழுதி கேள்விகளை எழுதினார். ஹுஸூர் பதில் எழுதினார்கள். உங்கள் கேள்வி நிறைய விஷயங்களை உள்ளடக்கியது. கடிதத்தில் பதில் தருவது கஷ்டமாகும். நீங்கள் எனது இன்ன நூலைப் படியுங்கள் என்று கூறினார்கள். இப்திகார் அலி சாஹிப் தமது தந்தையின் சகோதரியின் கணவர் மிக்தார் சாஹிபிடம் வாங்கி படித்தார். நூலைப் படிக்கப் படிக்க அவரது கேள்விகளுக்குப் பதில் கிடைத்துக் கொண்டே வந்தது. நவம்பர் 1941 –ல் கடிதம் மூலம் எழுத்துப்பூர்வமாக பைஅத் செய்தார்கள். 1942 –ல் காதியான் ஜல்ஸாவுக்குச் சென்றார். காதியானுடைய சூழ்நிலைக்கு மிகவும் கவரப்பட்டார். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய சொற்பொழிவுகளை மிகவும் ஆழமாகக் கேட்டார். பிறகு பைஅத் செய்தார். இவ்வாறு கையில் பைஅத் செய்யவும் வாய்ப்பு கிடைத்தது. ஒவ்வொரு வருடமும் காதியான் மாநாட்டிற்குச் செல்வார். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் சந்திக்கவும் வாய்ப்பு பெற்றார். இவரது மனதில் தோன்றும் கேள்விகளை ஹுஸூர் அவர்களிடம் கூறி பதில் பெறுவார்கள். இந்தியாவில் அரசுப் பணி செய்து வந்தார். பாகிஸ்தான் உருவாகும் வரை பணி செய்தார். பாகிஸ்தான் உருவானதும் 1951 –ல் பாகிஸ்தானுக்கு இடம்பெயர்ந்து ஆற்றல் மற்றும் நீர்ப்பாசனத் துறையில் சேவை செய்தார். அரசுப் பணியில் நிறைய மாற்றல்கள் (Transfers) கிடைத்தன. மனப்பூர்வமாக பணி செய்தார். Junior Engineer –லிருந்து முன்னேறி Cheif Engineer ஆனார். ஒரு சந்தர்ப்பதில் சில காலம் பஞ்சாப் அரசின் ஆற்றல் மற்றும் நீர்ப்பாசனத் துறையில் செயலராகவும் பணி ஆற்றினார்.

கண்ணியத்திற்குரிய உயர் பதவிகளில் பாகிஸ்தானுக்கு சேவை செய்யும் வாய்ப்பு பெற்றார். 1983 –ல் ஒய்வு பெற்றார். பிறகு வக்ஃப் செய்தார். ஆனால் 1980 –ல் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஸ்பெயின் சென்று திரும்பி வந்த பிறகு International Association of Architects and Engineer –ஐ நிறுவினார்கள். இப்திகார் அலி குறைஷி சாஹிபை அதன் முதல் Chairman ஆக நியமித்தார்கள். அவர்கள் அப்போது Cheif Engineer ஆக இருந்தார்கள். பிறகு ஒய்வு பெற்றார்கள். தமது வாழ்வை அர்ப்பணிக்க எடுத்து வைத்தார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் இவரது வக்ஃபை ஏற்றுக் கொண்டார்கள். 1983 –ல் வகீலுல் மால் சாலிஸ் உடைய பொறுப்பு கொடுக்கப்பட்டது. 1980 முதல் நியமிக்கப்பட்டார்கள். முதலில் நியமனம் பிறகு முறைப்படி தேர்தல் நடந்தது. சுமார் 25 ஆண்டுகள் Association உடைய தலைமையக Chairman ஆக இருந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் காலத்திலும் இவருக்கு நிறைய பணி செய்யும் வாய்ப்பு கிடைத்தது. புயூத்துல் ஹம்து குவார்ட்டர்ஸ் கட்டுதல் மற்றும் ஜமாஅத் உடைய கட்டடங்களை ரப்வாவில் கட்டவும்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நீங்கள் நன்றி செலுத்தி நம்பிக்கையும்
கொள்வீர்களாயின் உங்களைத் தண்டிப்பதில்
அல்லாஹ்விற்கு என்ன கிடைக்கப் போகிறது?
அல்லாஹ் மதிக்கக் கூடியவனும் நன்கு
அறிபவனுமாவான். (4:148)

A. SAMSUL ALAM
*Acting Ameer, Melapalayam*

வாய்ப்பு கிடைத்தது. கட்டுமானப் பணிகளின் கண்காணிப்பாளராக அன்னாரே இருந்தார்கள். பல்வேறு திட்டங்கள் உடைய சேர்மன் ஆக நியமிக்கப்பட்டார். ஃபஸ்லே உமர் மருத்துவமனை ஜாமிஆ அஹ்மதிய்யா, கிலாஃபத் நூலகம் போன்றவைகளில் நியமிக்கப்பட்டார்கள். இது தவிர ஃபஸ்லே உமர் பவுண்டேஷனின் இயக்குனராகவும் செயல்பட வாய்ப்பு கிடைத்தது. 2007 –ல் தஹ்ரீகே ஜதீதின் நாயிப் சத்ர் ஆக நியமித்தேன். மிகவும் நம்பகத்தன்மை –யுடனும் பிடிப்புடனும் சேவை செய்பவராக இருந்தார். கலீஃபாக்களின் காலத்தைக் கண்டுள்ளார். எல்லா இடத்திலும் கட்டுப்படுதல் உள்ளவர். பணியில் மூழ்கியிருப்பவர். மவுனமாக இருப்பார். இவருக்கு 36 ஆண்டுகள் வாழ்வை அர்ப்பணித்தவராகவே பணி செய்யும் வாய்ப்பு கிடைத்தது. மிகவும் தன்னலமற்று பணி செய்பவராக இருந்தார். அல்லாஹ் இவருக்கு 2 மகன்கள் 3 மகள்களை வழங்கியுள்ளான். ஒரு மகன் ஆர்கிடெக்டர்; ஒரு மகள் மருத்துவர்.

அல்லாஹ் இவருக்கு மன்னிப்பும் கருணையும் வழங்குவானாக. இவரது பிள்ளைகளிடமும் இவரது நன்மைகளைத் தொடரும் வாய்ப்பு வழங்குவானாக.

மூன்றாவது ஜனாஸா, ***ரஜியா சுல்தானா சாஹிபா***. இவர் மவ்லவி குர்ஷித் ஹகீம் சாஹிப் உடைய மனைவி ஆவார். இவர் தமது 81 வது வயதில் மரணம் அடைந்தார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

மர்ஹூமா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி அல்லாஹ் பக்ஷ் சாஹிப் உடைய மகன்வழிப் பேத்தியாக இருந்தார்கள். இளம் வயதிலேயே தொழுகை நோன்பில் பேணுதல் உள்ளவராக இருந்தார்கள். முழு வாழ்வும் எளிமையாகக் கழித்தார்கள். மிகவும் விருந்தோம்பல் செய்பவர். இவரது கணவர் கண்ணியத்திற்குரிய மவ்லவி ஹகீம் குர்ஷித் அஹ்மது சாஹிப் சத்ர் உமூமியாக பணி செய்து வந்தார். இவரது வீட்டில் எப்போதும் கூட்டம் நடக்கும். கண்ணியத்திற்குரிய மவ்லவி சாஹிப் 1984 –ல் இரண்டரை வருடம் இறை வழியில் சிறை செல்லும் வாய்ப்பு கிடைத்தது. இக்காலத்தில் இவர் மிகவும் தைரியத்துடன் குடும்பத்தை நடத்தினார். தினமும் நிறைய உணவு சமைத்து ஜெயிலுக்கு அனுப்பி வைப்பார். மிகவும் மவுனமாக நற்பணிகளைச் செய்து வந்தார். ஏழைப் பெண்களுக்கு திருமணம் செய்து வைத்தார். ஏழைப் பெண்களைப் பராமரித்தார். மிகவும் அன்பு காட்டுபவர் என்று அக்கம்பக்கத்தவர் கூறுகின்றனர். மர்ஹூமா வஸிய்யத் செய்தவர். இவரது நினைவாக ஒரு மகள் இருக்கிறார். அல்லாஹ் இவருக்கு கருணையையும் மன்னிப்பையும் வழங்குவானாக.

அடுத்த ஜனாஸா, கண்ணியத்திற்குரிய ***முஹம்மது தாஹிர் அஹ்மது சாஹிப்*** உடையதாகும். நாயிப் சத்ர் பைத்துல்மால் காதியான் ஆக இருந்த இவர் கண்ணியத்திற்குரிய மன்சூர் அஹ்மது சாஹிபின் மகன் ஆவார்கள். இவருக்கு கல்லீரல் புற்றுநோயினால் 28 மே அன்று மரணமடைந்தார். நூர் மருத்துவமனை காதியானில் மரணம் அடைந்தார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

மர்ஹூம் ஹைதராபாத்தைச் சார்ந்தவர். ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானிலிருந்து வெளிவந்து 1989 முதல் கடைசி மூச்சு வரை 2020 வரை 31 வருடங்கள் காதியானில் பல்வேறு பொறுப்புகளில் சேவை செய்தார். காலம் முழுக்க பொருளாதாரப் பிரிவில் பணி செய்யும் வாய்ப்பு பெற்றார். பைத்துல்மால் ஆமதில் 7 வருடங்கள், நஸாமத் மால் வக்ஃபே ஜதீதில் 9 வருடங்கள், இன்ஸ்பெக்டர் பைத்துல்மால் நாயிப் நாஸிம் வக்ஃபே ஜதீது ஆக 3 வருடங்கள், நாயிப் மால் வக்ஃபே ஜதீது ஆக 8 வருடங்கள், நாயிப் பைத்துல் மால் ஆக 2 வருடங்கள் பணி செய்யும் வாய்ப்பு பெற்றார். மிகவும் களங்கமற்றவர்; எளிமையானவர்; எளிதாகப் பழகுபவர்; அனுதாப உணர்வுள்ளவர்; இயக்கத் தொண்டர். இந்தியா முழுவதும் பயணம் செய்து ஜமாஅத்தின் பொருளாதார அமைப்பைக் குறித்து மக்களுக்கு எடுத்துச் சொன்னார். மக்களை இணைத்தார். அல்லாஹ்வின் அருளால் இவரது முயற்சியால் வக்ஃபே ஜதீதில் பொருளாதாரப் பட்ஜெட் மிகவும் உயர்ந்தது. மர்ஹூம் மூஸியாக இருந்தார். இவரது நினைவாக முதிர்ந்த பெற்றோருடன் மனைவி இரு மகன்கள் இருக்கின்றனர். மர்ஹூம் அவர்கள் காதியான் கஸா போர்டு உடைய தலைவர் மவ்லானா முஹம்மது கரீம் சாஹிப் ஷாஹிது உடைய மூத்த மருமகனும், நாஸிர் அஃலா காதியான் ஆகிய இனாம் கோரி சாஹிப் உடைய மாமா மகனும் ஆவார். இவரது ஒரு சகோதரர் காதியானில் முரப்பி சில்சிலா ஆவார். அல்லாஹ் இவருக்கு மன்னிப்பும் கருணையும் வழங்குவானாக. இவரது பிள்ளைகளைப் பாதுகாப்பானாக.

அடுத்த ஜனாஸா **வகீல் அஹ்மது சாஹிப்**. இவர் கானா இன்டர்நேஷனல் ஜாமிஆ உடைய ஆசிரியராகிய மிர்ஸா கலீல் அஹ்மது பேக் சாஹிப் உடைன் மகன் ஆவார். இந்த இளைஞர் வகீல் அஹ்மது பாகிஸ்தான் சென்றிருந்தார். அங்கு அவருக்கு Yold Sac Tumor இருந்தது. பல கஷ்டங்களுக்குப் பிறகு 13 –வது வயதில் இறை நியதியால் மரணம் அடைந்தார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

சிறு வயது முதலே ஜமாஅத்துடன் தொழுவதில் ஆர்வமுள்ளவர். தம்மை விட வயதில் குறைந்த சிறுவர்களை கவனித்துக் கொள்வார். மிகவும் நல்ல பையன். கட்டுப்பாடு உள்ளவன். கானாவின் ஹிப்ளு மத்ரஸாவில் ஆறாவது ஜுஸ்வு வரை ஹிப்ளு செய்யும் வாய்ப்பு கிடைத்திருந்தது. இவரது நினைவாக பெற்றோர் இரு சகோதரிகள் அது லியா, சகிலா இருக்கிறார்கள். இருவரும் வாழ்வை அர்ப்பணித்த குழந்தைகள். தந்தையார் மிர்ஸா கலீல் அஹ்மது பேக் சாஹிப் கானா ஜாமிஆவில் ஆசிரியராக பணியாற்றும் வாய்ப்பு பெற்றுள்ளார்.

இன்னோர் ஆசிரியர் நாஸிர் அஹ்மது சாஹிப் கானாவில் இருந்து எழுதுகிறார்: அகில் அஹ்மது மிகவும் அன்புக்குரிய பையன். மனமகிழ்ச்சி தரும் நல்ல இயல்புள்ளவன். அவனது புன்னகை பூத்த முகம் எப்போதும் நினைவில் உள்ளது. மிகவும் தூயவன். கட்டுப்படுபவன். ஜமாஅத்துடன் தொழும் பழக்கம் உள்ளவன். திருக்குர்ஆனுடன் அளவு கடந்த ஈடுபாடு உள்ளவன். தனது அன்றாட படிப்புடன் கடந்த வருடம் முதல் திருக்குர்ஆன் மனனமும் செய்து வந்தான். மக்ரிப் தொழுகைக்குப் பிறகு உணவு உண்டு விட்டு பள்ளிக்குப் போய் விடுவான். தமது பாடத்தைப் படிப்பான். ஸ்கூல் பணிகளை முடித்து விட்டு குர்ஆனில் சிறு பகுதி மனனம் செய்வான். பிறகுதான் தூங்கச் செல்வான். பெரியவனாகி முரப்பி சில்சிலாவாகி ஜமாஅத்திற்கு தொண்டு செய்வேன் என்று கூறி வந்தான். அல்லாஹ் இவருடைய தகுதியை உயர்த்துவானாக. தாய், தந்தையர் சகோதரிகளுக்கு இந்தத் துக்கத்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தி வழங்குவானாக.

தற்போது ஹாஸிர் ஜனாஸா கொண்டு வரப்போவதில்லை. பலர் ஜனாஸா தொழ வைக்க விண்ணப்பம் வைக்கிறார்கள். அவர்களின் ஜனாஸா ஜுமுஆவில் தொழ வைக்க முடியாமல் போனதாகக் கூறுகின்றார்கள். ஏனெனில் அதற்கு நேரம் தேவைப்படுகிறது. பெயரை மட்டுமே கூறுவதாக இருந்தாலும் நிறைய நேரம் ஆகும். எனவே சிலருக்கு மட்டுமே ஜனாஸா தொழுகிறேன். பொதுவாக மற்றவர்களின் விண்ணப்பங்கள் வருகின்றன. ஆனால் அவர்களின் பெயர் சொல்லாமல் இங்கு தொழுகின்ற ஜனாஸாக்களில் அவையும் இணைகின்றன. அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் மன்னிப்பு மற்றும் கருணையை வழங்குவானாக. ஜனாஸா தொழ வைக்க விண்ணபம் செய்தவர்களுக்கு பொறுமையையும் துணிவையும் வழங்கி அவர்களின் நன்மைகளைத் தொடரவும் வாய்ப்பு வழங்குவானாக. எவ்வாறிருப்பினும் ஜுமுஆவுக்குப் பிறகு ஜனாஸா காயிப் தொழ வைப்பேன் – இன்ஷா அல்லாஹ்.

**- தமிழாக்கம் : முஅல்லிம் M. நிஜாமுத்தீன்**

சான்றுகளைப் பதிவிட்டதில் உதவி செய்தவர் **முஅல்லிம் M. ஷாஜஹான்**

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் அயர்லாந்து சுற்றுப் பயணம் 28 செப்டம்பர் 2014

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

அதன் பிறகு தேசிய மஜ்லிஸே ஆமிலா அன்ஸாருல்லாஹ் அயர்லாந்து உடனான கூட்டம் ஹுஸுர் அவர்களின் துஆவுடன் தொடங்கியது. ஹுஸுர் அவர்கள் கேட்டதற்கிணங்க பொதுச் செயலாளர் இவ்வாறு கூறினார்: இங்கு 3 மஜ்லிஸுகள் உள்ளன. அன்ஸார் எண்ணிக்கை 49 ஆகும். தர்பிய்யத் செயலரிடம் தர்பிய்யத் நிகழ்வுகள் தொடர்பாகக் கேட்டார்கள். மேலும் வழிகாட்டுதல் வழங்கியவாறு முதலில் தொழுகையின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அனைத்து அன்ஸார் முறையாக ஐவேளைத் தொழுகையைத் தொழக் கூடியவர்களாக இருக்க வேண்டும். பிறகு M.T.A -வுடன் இணைப்பதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். M.T.A -வில் காலத்தின் கலீஃ.பாவின் குத்பாக்கள் மற்றும் உரைகளை முறையாகக் கேளுங்கள். பிற நிகழ்ச்சிகளில் இருந்தும் பயன் பெறுங்கள் எனக் கூறினார்கள். மேலும் ஹுஸுர் அவர்கள் தன் குழந்தைகளுக்கு கடினமான முறையில் அல்லாமல் அன்பான முறையில் புரிய வைப்பதன் பக்கமும் அன்ஸாருக்கு கவனமூட்டுங்கள். அதிகமானோர் தங்களுடைய குழந்தைகளிடம் கடினம் காட்டுவதன் மூலமாகவே அவர்களைக் கெடுத்து விடுகிறார்கள். வீடுகளில் குடும்பங்களில் மருமகள் மற்றும் மருமகன் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டு விடுகின்றது. இரண்டு குடும்பத்திலுள்ள பெரியவர்களும் அன்பு மற்றும் நேசத்தின் சூழலை உருவாக்கி நல்ல முறையில் குடும்பம் நடத்துவதற்கான முயற்சி செய்ய வேண்டும் என்று கூறினார்கள். வீடுகளில் M.T.A முறையாகப் பார்த்து வாருங்கள். அதில் வருகின்ற பல நிகழ்ச்சிகளில் ஏதாவது ஒரு நிகழ்வு சீர்திருத்த மற்றும் தர்பிய்யத்தின் விளைவை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு அமைந்து விடுகிறது. குத்பாவைக் கேட்பதின் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். மேலும் அது தொடர்பாக ஆய்வும் செய்யுங்கள். அன்ஸார்களுக்கு தினமும் முறையாக திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கம் கவனமூட்டுங்கள். மேலும் தினமும் எத்தனை அன்ஸார்கள் முறையாக திருக்குர்ஆன் திலாவத் செய்கிறார்கள் என்பதை ஆய்வு செய்யுங்கள்.

காயிதே தப்லீக் (தப்லீக் செயலர்) இடம் நிகழ்ச்சிகளைக் கேட்டறிந்து ஆய்வு செய்த பிறகு ஹுஸுர் அவர்கள் இந்த வழிகாட்டலை வழங்கினார்கள். உங்களுடைய தேசிய மஜ்லிஸே ஆமிலாவின் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் மஜ்லிஸே ஆமிலா உறுப்பினர்களுக்கும் அவர்களில் ஒவ்வொருவரும் ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்தி அவரை அஹ்மதிய்யத்தில் கொண்டு வருவதற்கான முயற்சியைச் செய்ய வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து விடுங்கள். உங்களுடைய தலைமையக மஜ்லிஸே ஆமிலாவின் எண்ணிக்கை 15 ஆகும். அதில் மூன்றில் ஒரு பங்கு வெற்றி பெற்றாலும் உங்களுடைய அன்ஸார் அமைப்பில் வருடத்தில் ஐந்து பைஅத்துகள் நடைபெற்று விடும். உங்களுக்கு ஒவ்வொருவருடனும் தனிப்பட்ட தொடர்பு மற்றும் அணுகுமுறை இருந்தால் மட்டும்தான் இந்த மக்கள் உங்களுக்கு நெருக்கமாக வருவார்கள். அதன் மூலம் அவர்களுக்கு தப்லீக் செய்து தூதுச் செய்தியை எட்ட வையுங்கள். சில மக்கள் தனிப்பட்ட தொடர்புகளை ஏற்படுத்துகிறார்கள். ஆனால் தப்லீகிற்கான அணுகுமுறை அதிகரிப்பதில்லை. உங்களுடைய அணுகுமுறையை அதிகரிப்பதற்கான முயற்சி செய்யுங்கள். தற்போது பள்ளிவாசல் கட்டப்பட்டதன் காரணமாக இந்த நகரில் மற்றும் முழு நாட்டிலும் மக்களின் கவனம் இதன் பக்கம் திரும்பும்.

Leaflets தொடர்பாக ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: தங்களுக்கென்று ஓர் இலக்கை நிர்ணயித்து அதை அடைவதற்கான முயற்சி செய்யுங்கள். ஆங்கில மொழி அறியாத அன்ஸாரிடமும் Leaflets விநியோகம் செய்யக்கூடிய பொறுப்பை ஒப்படையுங்கள். அவர்களும் பல இடங்களில் பிரசுரங்களை விநியோகம் செய்வார்கள். ஜமாஅத் உங்களுக்கு Literature கொடுத்தால்தான் நீங்கள் விநியோகம் செய்வீர்கள் என்று நீங்கள் காத்திருக்கக் கூடாது. நீங்கள் சுயமே உங்களுடைய நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு செயல்படுங்கள். முதலில் இரண்டு பக்க சிற்றேட்டில் அமைதி மற்றும் அன்பிற்கான தூதுச் செய்தியைப் பற்றி குறிப்பிடுங்கள். இந்த சிற்றேட்டை விநியோகம் செய்த பிறகு மீண்டும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகை தொடர்பாக குறிப்புகள் மற்றும் அன்னாரின் வருகை மூலமே அமைதி நிலை பெறும் என்ற செய்தி அடங்கிய சிற்றேட்டைத் தயார் செய்து விநியோகம் செய்யுங்கள். சிற்றேடு மற்றும் துண்டுப் பிரசுரங்களை தொடர்ந்து விநியோகம் செய்து கொண்டே இருங்கள். சிறு துளி பெரு வெள்ளமாகப் பெருகும்போது அதிக எண்ணிக்கையில் விநியோகிக்கலாம். பழைய நடைமுறையின்படி ஒருமுறை புத்தக அரங்கு அமைத்து விட்டால்போதும் என்று விட்டு விடக்கூடாது. அரங்கு அமைப்பதில் பயன் எப்போது இருக்கும் என்றால் அரங்கிற்கு மக்கள் வருகை தந்து அவர்களுக்கு அதிக ஆர்வம் ஏற்பட வேண்டும். ஆகவே குறைந்தது கையிலாவது புத்தகங்களைக் கொடுங்கள். அதன் மூலம் அறிமுகமாவது ஏற்பட்டு விடும் என்று ஹுஸுர் அவர்கள் கூறினார்கள். நேர்வழி கொடுப்பதை அல்லாஹ் தன் கையில் வைத்துள்ளான். ஆனால் உங்களுடைய பணி தூதுச் செய்தியை எட்ட வைப்பதாகும். திருப்புமுனையை ஏற்படுத்துவது இறைவனுக்கு தெரியும். நீங்கள் புதிய வழிமுறையை ஆய்வு செய்யுங்கள். பழைய வழிமுறையின் மீது வேலை செய்ய முடியாது. நீங்கள் தர்பிய்யத் மற்றும் தப்லீக் ஆகிய இரு பணிகளைச் செய்து விட்டாலே போதுமானதாகும். நாற்பது வயதிற்கு மேற்பட்டோர் அன்ஸாருல்லாஹ்வின் இணைந்துள்ளீர்கள். இது நடப்பு வழக்கிற்கான (Fashion) வயதில்லை. ஆகவே எவர் தாடி வைக்கவில்லையோ அவர் தாடி வைத்து விடுங்கள்.

மேலும் ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஒருவர், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் 'மக்கள் தாடி வைப்பதில்லை' எனக் கூறினார். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், 'எவருக்கு நம்முடன் அதிக தொடர்பு இருக்குமோ அவர் சுயமே தாடி வைத்து விடுவார்' எனக் கூறினார்கள்.

காயிதே மால் (பொருளாளர்) இடம் ஹுஸுர் அவர்கள் பட்ஜெட் தொடர்பாகக் கேட்டதற்கு அவர் அன்ஸாருல்லாஹ்வின் பட்ஜெட் 4 ஆயிரம் யூரோ எனக் கூறினார். அதற்கு ஹுஸுர் அவர்கள்

உங்களில் சம்பாதிக்கின்ற மருத்துவர்கள் இருக்கும்போது குத்தாமை விட உங்களுடைய பட்ஜெட் அதிகமாக இருக்க வேண்டுமே என்று கூறினார்கள். மேலும் ஹுஸுர் அவர்கள் பட்ஜெட் Gross Route Level -ன் அடிப்படையில் உருவாக்க வேண்டும். வீட்டில் இருந்தபடியே உருவாக்கக் கூடாது. சந்தா வருமானத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும் எவர் வருமானத்தைக் கூறவில்லையோ அவரிடம் நான் இவ்வளவு தொகையைத் தான் சந்தாவாக கொடுப்பேன். இதை விட அதிகமாகக் கொடுக்க முடியாது என எழுதிக் கொடுக்கச் சொல்லுங்கள். எவருடைய பின்னாலும் நீங்கள் தொங்காதீர்கள். மேலும் எவரையும் நிர்பந்தப்படுத்தி தவறான வாக்குமூலத்தைப் பெறாதீர்கள் என ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்.

காயிதே இஷாஅத் (வெளியீட்டுத் துறை செயலர்) நாங்கள் 'அன்ஸாருத்தீன்' என்ற பத்திரிகையை முதன் முறையாக வெளியிட்டுள்ளோம். எங்களுக்கு ஒரு பிரதி ஐந்து யூரோவில் கிடைக்கின்றது எனக் கூறினார். அதற்கு ஹுஸுர் அவர்கள் யூ.கே -வில் உள்ள அச்சகத்திலிருந்து அச்சிட்டு வெளியிடுங்கள். உங்களுக்கு குறைந்த ரூபாயே செலவாகும் என்று கூறினார்கள். மேலும் ஹுஸுர் அவர்கள் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் யூ.கே 250 பக்கங்கள் கொண்ட ஒரு லட்சம் Life of Muhammad என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளது. ஒரு புத்தகத்தின் விலை 60 பென்ஸ் ஆகும். இந்தப் புத்தகத்தை நீங்கள் யூ.கே -விலுள்ள அன்ஸாருல்லாஹ் -விடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் உங்களுக்கு அசல் விலைக்கே அதை தருவார்கள் என்று கூறினார்கள்.

காயிதே ஸிஹத் வ ஜிஸ்மானி (சுகாதாரத் துறைச் செயலர்) தமது அறிக்கையைச் சமர்ப்பித்தவாறு அனைத்து அன்ஸார் சகோதரர்களும் ஏதாவது ஒரு உடற்பயிற்சியைச் செய்ய வேண்டும் என்பதில் முயற்சி செய்து வருகின்றோம். தற்போது 35 அன்ஸார் சகோதரர்கள் உடற்பயிற்சி செய்கின்றனர் எனக் கூறினார். அதற்கு ஹுஸுர் அவர்கள் அந்த அன்ஸார் சகோதரர்களை நடைப்பயிற்சி செய்ய வையுங்கள். அனைத்து அன்ஸார் சகோதரர்களும் நடைப்பயிற்சி செய்யுங்கள். மேலும் CharityWalk -ல் பங்கு பெறுவதற்கான முயற்சி செய்யுங்கள் எனக் கூறினார்கள். மேலும் நீங்கள் உங்களுக்கான புத்தகங்களை வெளியிட வேண்டும் என்றால் உங்களுடைய மையமான Roseroe -விலிருந்து வெளியிடுங்கள். யூ.கே -விலிருந்து பெற வேண்டிய புத்தகங்களை அங்கிருந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்று ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்.

மஜ்லிஸே ஆமிலா அன்ஸாருல்லாஹ் அயர்லாந்துடன் நடந்த இந்தக் கூட்டம் 11.50 மணிக்கு முடிவடைந்தது. இறுதியில் மஜ்லிஸே ஆமிலா உறுப்பினர்கள் ஹுஸுர் அவர்களுடன் குரூப் ஃபோட்டோ எடுப்பதற்கான நற்பாக்கியத்தைப் பெற்றார்கள்.

அதன் பிறகு திட்டமிட்டபடி தேசிய மஜ்லிஸே ஆமிலா அயர்லாந்துடனான கூட்டம் ஹுஸுர் அவர்களின் துஆவுடன் தொடங்கியது. ஹுஸுர் அவர்கள் கேட்டதற்கிணங்க பொதுச் செயலாளர் அயர்லாந்தில் மூன்று ஜமாஅத்துகள் உள்ளது. அவர்களின் செயல் அறிக்கைகளும் கிடைக்கின்றது என்று கூறினார்.

தேசிய அளவிலான தர்பிய்யத் செயலரிடம் ஹுஸுர் அவர்கள் தர்பிய்யத் நிகழ்வுகள் தொடர்பாகக் கேட்டபோது, அவர் நாங்கள் தொழுகையின் பக்கம் கவனமூட்டுகின்றோம். தொழுகை வாரமும் நடத்தியுள்ளோம். மேலும் மஸ்ஜித் மர்யம் கால்வே மற்றும் பைத்துல் அஹத் டப்லின் அல்லாமல் வேறு சில இடங்களிலும் வீடுகளிலும் தொழுகை நிலையம் உருவாக்கியுள்ளோம் எனக் கூறினார். அதற்கு ஹுஸுர் அவர்கள் மக்கள் தொழுகைக்கு வருகை தருகிறார்கள் என்பதை அறிவதற்கான ஏதாவது ஓர் (System) அமைப்பு உங்களிடம் இருக்கின்றதா? எத்தனை அன்ஸார், குத்தாம் தொழுகைக்கு வருகிறார்கள்? அதிகதிகமாக குத்தாம் தொழுவதற்கு வருகை தர வேண்டும் என்பதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். சத்ர் ஸாஹிப் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா அவர்களை தொழுகைக்கு வர வைப்பதற்கான திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். திருக்குர்ஆனின் திலாவத் தொடர்பாக ஆய்வு செய்யவும். தினமும் எத்தனை நபர்கள் திருக்குர்ஆன் ஓதுகிறார்கள் என்ற தகவல் உங்களிடம் இருக்க வேண்டும் எனக் கூறினார்கள்.

ஹுஸுர் அவர்கள் முபல்லிக் இன்சார்ஜ் இப்ராஹீம் நோனன் ஸாஹிப் அவர்களை நோக்கி வெவ்வேறு பல இடங்களில் எத்தனை அஹ்மதி அன்ஸார், குத்தாம், அத்ஃபால் வசிக்கின்றார்கள் என்பதை ஆய்வு செய்வது உங்கள் மீது கடமையாகும். நீங்கள் தொழுகையில் எவ்வாறு மக்களின் வருகையை அதிகரிக்க முடியும் என்பதையும் ஆய்வு செய்யுங்கள். தொழுகை தொடர்பாக அறிவுறுத்தும் வகையில் வெறும் குத்பா கொடுத்து விட்டால் போதுமானது ஆகாது. மாறாக, வீடுகளுக்குச் சென்று அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தியவாறு கவனமூட்டவும் வலியுறுத்தவும் செய்யுங்கள். ஜமாஅத்தாக தொழுவது ஒவ்வொருவர் மீதும் கடமையாகும் என்பதை மீண்டும் மீண்டும் நினைவூட்டிக் கொண்டே இருங்கள் என்று கூறினார்கள்.

லபீப் அஹ்மது மிர்ஸா ஸாஹிப் என்ற முபல்லிக் நானும் ஜுமுஆ பேருரையில் தொழுகை தொடர்பாக கவனமூட்டிக் கொண்டே இருக்கின்றேன் எனக் கூறினார். அதற்கு ஹுஸுர் அவர்கள் வெறும் குத்பாவில் கவனமூட்டுவது போதுமானதல்ல. நீங்கள் ஒவ்வொரு குடும்பத்துடனும் தனிப்பட்ட முறையில் தொடர்பை ஏற்படுத்துவது அவசியமாகும். நீங்கள் அவனுடைய அனுதாபி என்பதை அவருக்கு உணர்த்த வேண்டும். அப்போதுதான் அவர்கள் உங்களுடைய பேச்சைக் கேட்பார்கள். தொழுகை நிலையத்திற்கு வருகை தருவார்கள். தொழுகையில் வருகையை அதிகரிப்பதற்காக தேசிய தர்பிய்யத் செயலர், காயிதே தர்பிய்யத், முஹ்தமிம் தர்பிய்யத் பிற ஜமாஅத்துகள் மற்றும் மஜாலிஸ்களின் தர்பிய்யத் பிரிவின் Gross Rout Level -ன் அடிப்படையில் பணிபுரிவது அவசியமாகும். மேலும் தொழுகையின் பக்கம் கவனமூட்டுவதுடன் திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கமும் கவனமூட்டுங்கள். அதிகமான மக்களை M.T.A -வுடன் தொடர்புபடுத்துங்கள். என்னுடைய ஜுமுஆ குத்பாவை தொடர்ந்து முறையாகக் கேட்க வையுங்கள். மக்களில் யார் யார் தொடர்ந்து முறையாகக் குத்பா கேட்கின்றார்கள். மேலும் அதில் யார் பலவீனமாக இருக்கிறார்கள் என்பது தொடர்பான (Data) தகவல்கள் உங்களிடம் இருக்க வேண்டும். M.T.A -வில் பல நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன. ஒவ்வொருவரும் தனது விருப்பத்திற்கேற்ப பிடித்த நிகழ்ச்சிகளைக் காணலாம் என்று கூறினார்கள்.

**- தமிழாக்கம் : மவ்லவி அபுல் ஹஸன் ஆபிது**

*(தொடர்ச்சி அடுத்த இதழில்....)*

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 29 October 2020 Issue No. 44

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**வெள்ளிக்கிழமைக்கு இஸ்லாம் சில சிறப்புகளை வைத்துள்ளது. அந்த நாள் விடுமுறையாக இருக்க வேண்டும். இறை வணக்கங்களை அதிகம் செய்ய வேண்டும். அதை சமுதாயம் ஒன்று கூடும் நாளாக ஆக்கியிருக்கிறது.**

**அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் மெமோரியல் மற்றும் ஜமாஅத் முயற்சிகளுக்குப் பிறகு அரசாங்கம் ஜுமுஆ தொழுகைக்காக ஒரு மணி நேரம் விடுமுறை வழங்கியது.**

*யூதர்களில் சபத் நாள் சனிக்கிழமை கொண்டாடப்படுகிறது. மேலும் பைபிளில் சப்த் என்ற சொல்லே இதற்கு சான்றாகும். (எனவே சப்த் என்பதன் பொருள் சனிக்கிழமை என்றாகி விட்டது. இல்லையென்றால், அன்றாட பணிகளை விட்டு விடுவதற்குப் பெயர்தான் சப்த் என்பதாகும். இதன் காரணமாக இஸ்ரவேலர்களின் சப்த் என்பது சனிக்கிழமையாகும். மேலும் முஸ்லிம்களுக்கு வெள்ளிக்கிழமை)....*

*கிறித்தவர்களும் சப்த் நாளின் முக்கியத்துவத்தை ஒப்புக் கொள்கின்றனர். ஆனால் அது அவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை ஆகும். இதற்குக் காரணம், சில ஐரோப்பிய சமுதாயங்களும் மன்னர்களும் கிறித்தவத்தின் பக்கம் விருப்பம் கொண்டபோது அவர்கள் கிறித்தவர்களாக மாறுவதற்கு ஒரு நிபந்தனை வைத்தனர். அதாவது விடுமுறை நாள் ஞாயிற்றுக்கிழமையாக அறிவிக்க வேண்டும். மேலும் அவர்களை கிறித்தவர்களாக மாற்றும் பேராசையில் பாதிரிமார்கள் அவர்களின் இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டனர். இவ்வாறு சப்த் (சனிக்கிழமை) -ஐ அவமதிப்பதை யூதர்களை விட முந்தி விட்டனர். ஏனெனில் யூதர்களாவது சப்த் (சனிக்கிழமை) நாளில் எப்போதாவது ஏதாவது பயனுள்ள வேலைகளையும் செய்தனர். ஆனால் கிறித்தவர்கள் சனிக்கிழமையை நிரந்தரமாகப் பணி செய்வதற்கான நாளாக்கி விட்டனர். மேலும் ஓய்வுக்கான நாளாக ஞாயிற்றுக்கிழமையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.*

*இறைவனின் கட்டளையின்படி அப்படி நடந்தால் அது ஒன்றும் ஆட்சேபனைக்குரியதன்று. ஆனால் இங்கு நடந்தது இறை கட்டளையின்படி அல்ல. தனது விருப்பத்தினால், ஹஸ்ரத் மஸீஹ் ஈஸா (அலை) அவர்களின் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு நடந்தது. ஹஸ்ரத் மஸீஹ் நாஸிரீ (அலை) அவர்களே சனிக்கிழமைக்கு கண்ணியமளித்து வந்தார்கள். சப்த் நாளைப் பற்றி யூதர்களிடம் மிகைப்படுத்துதல் உருவாகி விட்டன என்ற போதிலும் - இயேசு அதற்கு எதிராக இருந்தார் என்ற போதிலும் (அவர் சப்த் நாளுக்கு மதிப்பளித்து வந்தார்).*

*ஏனெனில் அவர் கூறுகிறார்: "மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை; ஓய்வு நாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது." (மாற்கு 2:27) இதன் பொருள், உண்மையான தேவைகள் ஏற்பட்டால் அதில் சப்த் (சனி) கிழமை பற்றிய விளக்கமான கட்டளைகளைப் பேணுங்கள். சனிக்கிழமை மார்க்கப் பணிகளைத் தடுக்க முடியாது. சனிக்கிழமை தப்லீக் செய்வது, அறிவுரை கூறுவது மற்ற நல்ல பணிகளைச் செய்வதும் ஆகுமானதல்ல என்ற முட்டாள்தனமான சிந்தனை யூதர்களிடம் தோன்றியது. ஆனால் சப்த் நாளில் உலகப் பணிகள் தடுக்கப்பட்டிருந்தது...........*

*யூதர் அல்லாத சமுதாயங்களிடம் கிறித்தவர்களுக்கு எதிர்ப்பு ஏற்படக் கூடாது என்பதற்காக ஞாயிற்றுக்கிழமையை கிறித்தவர்கள் சப்த் தினமாகக் கொண்டாட ஆரம்பித்து விட்டனர் என சில விரிவுரையாளர்கள் எழுதுகின்றனர். பர்னபாஸ் கடிதத்தில் இதற்குரிய காரணம், இயேசு அந்த நாளில் மரணித்தவர்களிலிருந்து உயிர் பெற்றெழுந்தார் என எழுதப்பட்டுள்ளது. (ஜீயூஷ் என்சைக்ளோபீடியா தொகுதி 10)*

*எந்நிலையிலும் எந்தக் காரணமாக இருந்தாலும் அது மூஸாவின் போதனைக்கு மாறுபட்டதாக இருந்தது. இஸ்லாமும் சப்துக்கென்று ஒரு நாளை நியமித்திருக்கிறது. அது வெள்ளிக்கிழமையாகும். வெள்ளிக்கிழமையை ஏதோ ஒரு கணிப்பின்படி முஸ்லிம்கள் நியமிக்கவில்லை. மாறாக, அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப நியமிக்கப்பட்டுள்ளது. எனவே கிறித்தவர்களின் மீதும் எழும் ஆட்சேபனை முஸ்லிம்களின் மீதும் எழாது. இஸ்லாம் வெள்ளிக்கிழமைக்காக இந்த சிறப்பு நியமித்துள்ளது. அந்த நாளில் விடுமுறை வைக்கப்பட வேண்டும். அதிகாக இறை வணக்கங்கள் செய்ய வேண்டும். அதை சமுதாய அளவில் ஒன்று கூடும் நாளாக ஆக்க வேண்டும். குளிக்க வேண்டும். சுத்தமாக இருக்க வேண்டும் நோயாளிகளை நலம் விசாரிக்க வேண்டும். இவ்வாறு இன்றும் பல சமுதாய சமூகப் பணிகளைச் செய்ய வேண்டும். ஆயினும் ஜுமுஆ தொழுகை நிறைவு செய்த பிறகு மக்கள் தமது பணிகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப் -பட்டுள்ளது. ஆயினும் பின்னரும் இறை தியானத்தில் ஈடுபட்டிருப்பதையே பொருத்தமானதென்று குறிப்பிட்டுள்ளது.*

*ஆனால் முஸ்லிம்களும் சப்த் நாளை கண்ணியப்படுத்த -வில்லை. மேலும் ஜுமுஆ நாள் பெரும் நகரங்களைத் தவிர குறிப்பிட்ட காலம் வரை இந்தியாவிலிருந்து மறைந்து விட்டது என்பது பரிதாபத்திற்குரியதாகும். இப்போது சிறிதளவு கொஞ்சம் கவனம் ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் நூற்றில் ஒரு முஸ்லிம் கூட ஜுமுஆ தொழுகை கூட நிறைவேற்ற ஆயத்தமாக இல்லை. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் தோற்றுனர் அவர்களின் மெமோரியல் மற்றும் ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் முயற்சிகளுக்குப் பிறகு அரசாங்கம் ஜுமுஆவிற்காக ஒரு மணி நேரம் விடுமுறைக்காக ஒப்புதல் வழங்கியுள்ளது. ஆனால் முஸ்லிம்கள் இப்போதும் இதிலிருந்து பயன் பெறவில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும். மேலும் சில இடங்களில் பிற முஸ்லிம்கள், ஜுமுஆ தொழுகைக்காக விடுமுறைக்கான விண்ணப்பம் அஹ்மதிகளின் விஷமத்தனமாகும்; நாங்கள் அதில் கலந்து கொள்ளவில்லை என அரசாங்க உயர் அதிகாரிகளிடம் கூறி விடுகின்றனர்.*

*(தஃப்ஸீரே கபீர் தொகுதி 1 பக்கம் 497-498 காதியான் பதிப்பு 2008)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad